15-5-59

முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

அத்தியாயம் 1

ரோமாபுரிப் பாண்டியன்

செ

சீரற்ற கிழவிக்கு 'அழகி'ப்பட்டம்; செத்துவிட்ட மொழிக்கு அரசபீடம்?

அழகுப் போட்டி நடக்கும் என்று நடுநிலையாளர் அறிவித்தார். மக்கள் ஆவல் மீதூர அழகிகளின் வரவை எதிர்பார்த்தனர். அவர்களும் அன்னநடை பயில வந்தார்கள்.

நடக்கும்போது மடஅன்னம் போலவும், நிற்கும்போது வஞ்சிக்கொடி போலவும், கிடக்கும்போது ஓவியப் பாவை கீழே கிடப்பது போலவும் உள்ள பெண் வந்தாள், முதலில்!

அவளை அடுத்து, இன்னொருத்தி வந்தாள்! அவளை எங்கோ பார்த்தமாதிரி இருந்தது! ஆம்... ஆம்....குயிலிலே இவளுடைய இனிய மொழியைக் கண்டிருக்கிறோம்; கயல் மீனிலே இவள் கரிய விழியைப் பார்த்திருக்கிறோம்; மயில் நடனத்திலே இவள் நடையைக் கண்டிருக்கிறோம்!

அடுத்தவள் வந்தாள். குண்டு மல்லிகைப் பூவாடையும் கூட வந்தது. கற்கண்டுமொழி பேசி அவையிலமர்ந்திருப்போர் களிதீர்த்தாள்; கெண்டை விழிகளை உருட்டிக் காட்டி மனதை வாட்டி வைத்தாள்.

இவளை அடுத்து, இன்னொரு பெண் வந்தாள்; கூந்தலை அவிழ்த்து முடித்தாள்; குங்குமத்தைச் சரிசெய்தாள்; கண்ணுக்கு மையிட்டாள்; முந்தானையை எடுத்து எடுத்துப் போட்டுக் கொண்டாள்! அவையில் அமர்ந்திருப்போர் அருவருப்புக் காட்டினர்கள்.

இப்படிப் பலர் வந்தார்கள்; கடைசியில் நான்கு பெண்கள் வந்தார்கள்; முன்பு வந்து சபை முன்பு நாணம் மறந்து அழகு காட்டியவர்களிலிருந்து முழுதும் முரண்பட்டிருந்தார்கள், பாதம் முதல் முடிவரை!

அந்த நான்கு பெண்களுக்குள்ளும் ஒரு பெண் என்றும் மாருத இளமைத் தோற்றம் அளித்தாள், அவள் சிறுபிறை நெற்றியில் செந்தூரம் பூத்திருந்தது; வண்டுதான் விழியோ, நெற்றி பிறைநிலாதானே, பற்கள் முத்துக்களோ, உடுக்கைதான் இடையோ, தாமரைதான் முகமோ, இதழ்கள் பவளத்துண்டோ,—என ஐயுறும் வண்ணம் அவள் அழகு இருந்தது.

இவளை அடுத்து வந்தாள் ஒரு கிழவி. அவள் தலைமயிர் கொக்குப்போல் நரைத்திருந்தது. எண்ணத் தொலையா சுருக்கங்கள் விழுந்திருந்தன. முடைநாற்றம் மேனியெல்லாம் விசிற்று. கண்களில் ஒதுங்கியிருந்த பீழையைச் சுற்றிப் பொடிக் கொசுகள் ஒருகோடி ரீங்காரமிட்ட வண்ணம் இருந்தன. தள்ளாடும் நடையோடு அந்த அழகுப் போட்டியில் கலந்து கொண்டாள் அவள்!

போட்டி முடிந்தது! கிழவி தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவித்தார், நடுநிலையாளர்!

—இது சொந்தக் கற்பனையல்ல. பாராளுமன்றத்தின் ஒரு உறுப்பினர், சமஸ்கிருத மொழி பற்றிய விவாதத்தின்போது கூறிய கற்பனை ஓவியம்.

"சமஸ்கிருதத்துடன், அது பெற்றெடுத்த பதினுன்கு மொழிகளும் ஆட்சிமொழியாவதற்குப் போட்டியிடுகின்றன, அழகுப் போட்டியைப்போல்! ஆனல் என்னைப் பொறுத்தவரை சமஸ்கிருதத்தின் பக்கமே நிற்பேன்"

—என்று கூறினர், எதிர்க்கட்சியைச் சார்ந்த அவர். வடமொழி வெறி அவர் கண்ணை மறைக்க, என்றும் இளமை வாய்ந்த தமிழ் மொழியையும், அதன் கிளை மொழிகளாம் திராவிட மொழிகளையும் மறந்துவிட்டு 'செத்தமொழி' என்று மொழியியல் வல்லுனர்களால் கூறப்படுகின்ற வடமொழி எனும் கிழவியை அணைத்துச் சுகம் காண ஓடுகிருர், இவர்!

ஓடுகின்ற அவசரத்தில் 'தமிழ் மொழிக்கும் தாய்மொழி சமஸ்கிருதம்' என்ற பச்சைப் பொய்யை உதிர்த்துவிட்டு ஓடுகிருர். மொழி வெறியால் விழி மூடிக் கிடக்கும் இவர் போன்றவர்களைத்தவிர மற்றவர்களுக்கு சமஸ்கிருதத்தின் கதை நன்ருகப் புரியும்.

பாலி, பைசாசம் ஆகிய மொழிகளின் சவக்காட்டில முளைத்து வளர்ந்த இந்த வடமொழியை 'வேதப்பறை கொட்டுகின்ற மறைமொழி இது; மறையவரால்லாதோர் படித்தால் கறை பட்டுப் போகும்; பாமர மக்களின் கண்களிலிருந்து, மறைக்கப்பட வேண்டிய தேவமொழி'—என்று கூறி மக்களின் நாக்கிலே நடமாட வேண்டிய மொழியை மடங்களிலே அடைத்துப் போட்டனர்!

மடங்களிலே மக்கி மறைந்து விடவில்லை, அது! மக்களுக்குத் தேன் எனச் சுவைத்த மொழிகளாம் தென்மொழிகளின் கருவையும் உருவையும் சிதைக்கத் துவங்கியது, மதம் எனும் விஷ நாக்கை நீட்டிய வண்ணம்!

"உங்கள் தமிழ் மொழியை எங்கள் வடநாட்டு அகத்தியன் தானப்பா வகுத்துக் கொடுத்தான். தொல்காப்பியன் யார்? பாணினி யார்? இந்திரம் எனும் நூலை இயற்றியவன் யார்? எல்லாம் வடவர்கள் — என்றுகூறி வரலாற்றறிவு பற்றிய நம் அறியாமையைப் பயன்படுத்திக் கொண்டு 'தமிழுக்கும் தாய் மொழி' என்ற அரியாசனத்தை வஞ்சக வேலைக்கான பரிசாகப் பெற்றுகொண்டது.

ஏமாந்த காலத்தில் ஏற்றம் கொண்டு எல்லைப்புறத் தமிழ் மொழிகளைச் சிதைத்து, தெலுங்கு கன்னட, மலையாள மொழிகளாக உருமாற்றி விட்டு, "கன்னித் தமிழ் பின்னப் பட்டதை பார்! பார் !!" எக்காளமிட்டுக் குதித்தது.

இத்தனையும் செய்தென்ன, விரல் விட்டு எண்ணக் கூடியவரின் நாவிலே நடமிட்ட இந்த மொழி நாளாக நாளாக நலிந்து தேய்ந்து மெலிந்து சந்திப்பிணமாயிற்று ஒருநாள்!

செத்த பின்னர் சுடுகாட்டுப் பயணத்தை நடத்தி, பூமிச் சுவற்றுக்குள்ளே மூச்சை நிறுத்திக் கொண்ட இந்தப் பிரேத மொழியின் மேனியை மண் தின்றது; பின்னர் மண்டையோடு கழன்றது, புழுக்கள் முளைத்தன; அழுகல் நாற்றம் அண்ட சராசரத்தையும் கலக்கியது.

இத்தகைய புழுக்கள் நெளிகின்ற மேனியும், அழுகி சிதைந்து போன முகமும் கொண்ட வடமொழியைத் தூக்கி நிறுத்தி 'லாலி' பாடுகிருர்கள், டில்லிப் பாராளுமன்றத்திலுள்ள வடவர்கள்!

'லாலி' பாடும் வரிசையிலே, வடமொழிப் பிரேதத்தின் மேல் தோன்றிய 'காளான் மொழியாம்' இந்தி மொழியைப் பேசுவோர் இருப்பதற்குக் காரணம் இந்தி முளைத்த இடமே சமஸ்கிருதக் காட்டில்தான்!

ஓங்கி வளர்ந்து உலகெலாம் பரவி நிற்கும் ஆங்கிலம் வேண்டாம்; தூங்கி வழிகின்ற நாய் கல்லடி பட்டதும் கத்துகிறதே "கை! கை!"—என்று, அத்தகைய மொழியே எங்களுக்கு வேண்டும்; வெளி நாட்டான்மொழியை அழித்தொழிப்போம். என்று கூவித் திரிகின்றவர்கள் உள்பட பொறுப்புள்ள வடநாட்டுப் பேராசிரியர்கள்வரை சமஸ்கிருதத்தை வாழ்த்துகிருர்கள், அரசுக் கட்டில் ஏறுக என!

ஆதரிக்கும் படியைத் தாண்டி, ஆதரிப்பாரற்ற வட மொழியை எவ்விதத்தில் பயன்படுத்துவது என்று அரசினருக்கு அறிவுரை தரும் கடைசிப் படியையும் மிதித்துவிட்டார் இன்னொரு உறுப்பினர்!

"சமுதாய நல அபிவிருத்திப் பிரதேசங்களில் மக்களின் உற்சாகத்தைக் கிளப்புவதற்காக ராமாயண, பாரதப் பிரசங்கம் செய்கின்றவர்களின் ஊழியத்தை சர்க்கார் பெற வேண்டுமென்று நான் வற்புறுத்துகிறேன்."

ராமாயணமும் பாரதமும் உற்சாகத்தைக் கிளப்புமாம். புராணப் பிரசங்கிகளின் ஊழியத்தை நடத்த வேண்டுமாம், அரசினர்!

—கூறுகிருர் இவர்!

வடமொழியில், மதம் கலவாத நல்லறம் கிடையாது. காமரசமற்ற காவியம் கிடையாது— என்பது வடமொழியறிந்த வல்லுனர்கள் கூற்று.

ஆனல் இவர் கூறுகிருர்:

"இந்தப் புராணகாவியங்களில் ஒழுக்க சம்பந்தமாகவும், கலாச்சார சம்பந்தமாகவும் சில அம்சங்கள் இருப்பதால் அவற்றை மக்கள் மனதில் புகுத்த முடியும்"

—இவர் கூறுகிறபடி மக்கள் மனதில் புகுந்து திருத்தக்கூடிய அளவிற்கு அக்காவியங்கள் இல்லை என்பதும் ஒழுக்கம் புகுகின்ற நேரத்தில் கீழ்த்தர உணர்ச்சி தரும் ரசங்களும் புகும் என்பதும், அறிஞர்கள் ஆய்ந்து கண்ட முடிவு.

வடமொழி மாநாட்டிற்குத் தலைவராக அமர்ந்து, அம்மொழியைப்பற்றி ஆராய்ச்சியுரைகளைக் கூறிய பூமிதான இயக்கக் கிழவராம் விநோபாகூட, 'காமரசம் சிந்தும் காவியங்களுக்காக நான் வடமொழியைக் கற்கவில்லை. சில அறநூல்களைப் படிக்கவே கற்றேன்—என்று கூறினர்.

ஆனல் இவர் கூறுகிருர், அக்காவியங்கள் மக்களின் மனதில் ஒழுக்கத்தைப் புகுத்துமென்று!

இவர் மட்டுமல்ல இந்தி பேசுவோர் அனைவரும் மொழியைப் பற்றி மட்டுமல்ல, இந்த நாட்டைப் பற்றியுமே அவர்கள் தப்புக் கணக்குப் போட்டிருக்கிருர்கள் என்பதைக் காட்டுகிறது.

"சமஸ்கிருதம் (வடமொழி) நாட்டில் ஒற்றுமையை உண்டாக்குவதற்கான பெரிய சாதனமாகும்!"

—என்னும் பேச்சுகள்.

அந்தோ பரிதாபம்....தென்னகத்தின் ஒவ்வொரு பகுதியிலும், பல்கலைக் கழகத்திலும், பள்ளிகளிலும் தமிழிலிருந்து முற்றிலும் முரண்பட்டிருக்கும் வடமொழியின் வைரிகள் வளர்ந்து வருகிருர்கள்; வாழ்ந்து வருகிருர்

[தொடர்ச்சி பக்கம்—12]

அந்தோ பரிதாபம்!

அன்ெருரு நாள். ஐந்தடி மண்கூடக் கொடுக்க முடியாது என்று கூறிய துரியோதனதியரை எதிர்த்து, ஒரே மனைவியைப் பங்கு போட்டுக்கொண்ட பாண்டவர்கள் போர் தொடுத்த நேரம். குருக்ஷேத்திரத்தில்...குருதி மழை கொட்ட, பருந்துகள் கூடிப் பறந்து வானத்தில் பந்தல் கட்ட, உருவிழந்து,கரமிழந்து, சிரமிழந்து படைவீரர் கதற போர் நடந்து கொண்டிருந்த போது...தமிழ் நாட்டரசன் ஒருவன் அத்தனை படைகளுக்கும் சலியாது சோறு படைத்தான்; இருதரப்பாரின் வயிறு நிறைய உணவு தந்தான்; அவர்களிடமிருந்து புகழ் மாலை பெற்ருன், அந்த சுதந்திரவீரன்!

ஆனல் இன்ருே பச்சைத் தமிழர் ஆட்சி பக்கத்திலிருக்கும் கேரள நாட்டிற்குக்குசெல்லும் அரிசி மூட்டைகளைப் பார்த்து. அடித்துக் கொள்கிறது, வயிற்றில்! தஞ்சைத் தரணியின் வளத்தைப் பெருக்கி, தனக்கும பிறருக்கும் உணவளிக்க வகையற்ற சர்க்கார், கேரள நாட்டிற்குப்-போகும் நெல் மூட்டையை 'நில்'லென்று கூறவும் கூட வக்கற்றிருக்கிறது; எனவே, எஜமான் இருக்கும் டில்லி நோக்கித் தெண்டனிட்டுத் தொழுதிருக்கிருர்கள், "எங்கள் அரிசியை நாங்களே தின்ன அனுமதியுங்கள்"—என்று!

அந்தோ பரிதாபம்; அடிமைச் சிற்றுயிர்கள்!

வெள்ளி 15—5—59 சென்னை

உழவன் கண்ணீர்!

"வளம்பல பெற்றிருக்கிறோம், நாம். என்றாலும் வக்கிர புத்தியுள்ள இந்த எதிர்க்கட்சிக்காரர்கள் ஆளவந்த எங்கள்மீது குற்றச்சாட்டு எனும் குப்பை கூளங்களைக் கொட்டுவதன் மூலம் ஆனந்தம் காண்கிறார்கள்"—என்று அமைச்சர்கள் சட்டசபையில் கூறினார்கள், நாட்டின் நலிவு பற்றிப் பேசிய மாற்றுக் கட்சியினரைச் சுட்டிக்காட்டி.

கோடை வெய்யில் தருகின்ற வெப்பத்தை—குள்ளநரி மனம் கொண்ட உள்ளூர் மிராசுகளின் கொடுமையைத் தாங்கிக் கொண்டு, நெற்றி வியர்வை நிலத்தில் விழப்பாடுபடுகின்ற உழவர் பெருமக்கள் உட்பட பாட்டாளிகள் அனைவரும் பரவசப் புனலிலே ஜலக்கிரீடை செய்வதாக எண்ணிட வேண்டாம், கூவம் மாளிகையிலும் 'குளு குளு' வாசத்திலும் இருந்து கொண்டு!—என்று நாம் தட்டிச் சொன்னோம்; எட்டவில்லை அவர்கள் காதிலே!

லட்சோப லட்சம் ரூபாய்களைக் கொட்டியளந்து, "கிராமங்களிலே இருட்டைப் போக்கிட மின்சாரத்தைக் கொண்டு வந்தோம். எங்கள் திறன் பாரீர்" என்று தற்பெருமை நகராவை முழங்கித் திரிகிறார்களே, நம் அரசினர், அவர்கள் கிராமங்களிலே காண மறக்கிற காட்சிகள் ஏராளம்!

குட்டிச்சுவர்கள் சூழ்ந்து நிற்கும்; பள்ளியிலே பயில வேண்டிய சிறார்கள் ஆட்டுக்குட்டி மேய்த்து நிற்பார்கள், கோவண ஆடையுடன்! கூழில்லாத சட்டி வரப்பிலே கிடக்க, மரக் கொப்பிலே குழந்தை 'பசித் தூக்கம்' தூங்க, ஆணும் பெண்ணும் அரைவயிற்றுப் பட்டினியோடு வேலை செய்து கொண்டிருப்பார்கள், வயலிலே!

உலக இலக்கியங்கள் தாலாட்டுகின்ற உழவுத்தொழில் இப்படி ஊமையர்களின் தொழிலாய்—உலக நாகரிகம் அறியாதவர்களின் தொழிலாய் — வறுமைச் சேற்றில் உழல்பவர்களின் தொழிலாய்க் கருதப்படுகிறது.

நஞ்சை நிலத்தில் நெல் நாற்றை நட்டு, வளர்த்துக் காத்து அறுத்தாலும் புஞ்சை நிலத்துப் பயிர்களை தின்று வயிறு வளர்க்கும் வகை கெட்ட பஞ்சைகளின் வாழ்க்கைதான், உழவன் வாழ்க்கை.

—இது வேறெந்த நாட்டிலும் இருக்கின்ற உழவனின் வாழ்க்கையல்ல;

"கிராமங்களே பாரதத்தின் முதுகெலும்பு. ஆகவே போடுகிறோம் கூட்டுறவு பண்ணைத் திட்டம்!" என முழங்குகிற காந்தீய சீடர்களின் நாட்டில் பிறந்து விட்ட ஏழை உழவனின் கதை!

'ஒட்டிய வயிறுடைய உழவருக்காகத்தான் கட்டிய முழங்கால் துண்டுடன் காடுமேடெல்லாம் நடந்தார், எங்கள் மகாத்மா!"—என்று 'பழங்கதை பேசும் பாரதப் புதல்வர்களின்' நாட்டில் உலவுகின்ற உழவனின் சோக வரலாறு.

அவன் வரலாற்றிலே—தமிழகத்து உழவனின் வரலாற்றிலே வறுமைப் புயல் அடிக்க ஆரம்பித்திருக்கிறது; வரட்சி காணத் தொடங்கிவிட்டது!

ஆம், தென்பாண்டி மண்டலத்திலே துவங்கிய வரட்சி நோய் வட ஆற்காடு வரை படர ஆரம்பித்திருக்கிறது.

ஏதோ கால் வயிற்றுக் கஞ்சியை அளித்த பூமி, அதுவும் தராத நிலையில் வரண்டுவிட்ட நிலைகண்டு கண்களிலே நீரைத் தேக்கி நிற்கின்றனர், அந்த மாவட்டங்களின் உழவர் பெருமக்கள்.

ஏரி, குளப் பாசனத்தை நம்பியிருக்கும் வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள **2300** ஏரி குளங்களில் **2000**—த்திற்கு மேற்பட்ட ஏரிகள் வற்றிவிட்டனவாம்.

இருப்பதோ, **2300** ஏரிகுளங்கள்!

வற்றியவை, **2000**—த்திற்கு மேற்பட்டவையாம்!

ஏரி குளங்கள் வற்றி விட்டால், அதுவும் மழை மாரியற்ற இந்த நாளில் என்ன நடக்கும்?

பயிர் பச்சைகள் காய்ந்து சருகாகும்;

போட்ட பணம் கிணற்றில் போட்ட சர்க்கரையாகும்;

பாட்டாளி வயிறு காயும்;

பட்டினிப் பட்டாளம் பெருகும்;

கண்ணீர் வெள்ளம் கரை புரண்டோடும்;

கிராமங்கள் குட்டிச் சுவர்களாய் நிற்கும்;

பிள்ளையோ பிள்ளையென்ற கூவல் கேட்கும்;

பெண்களின் கற்பு விலைபேசப்படும்;

பாதையோரங்களில் பிணங்கள் தடுக்கிவிடும்;

இத்தனைக்கும் மேலாக ஊராள்வோரை நடுங்க வைக்கும் உழவன் கண்ணீர் நிலத்தில் சிந்தும்!

இத்தகைய விபரீதங்கள் நிகழாமலிருக்க வேண்டுமானால் வரட்சிப் பகுதிகளில் உழவர்களை மிரட்சிக்குள்ளாக்கும் கடுமை நிறைந்த வரிவசூலை இந்த மாநில அரசு தள்ளுபடி செய்யவேண்டும்;

கிணறுகளை ஆழப்படுத்த நிதி உதவி புரிய வேண்டும்.

கிணறுகளில் மோட்டார் பம்புகள் வைக்க—குறைவான விலையில் மின்சாரம் கிடைக்கச் செய்யவேண்டும்.

விவசாயக் கருவிகளை குறைந்த விலையில் உழவர்களிடையே விநியோகிக்க வேண்டும்.

உழவர்களின் இதயத்தைக் கடித்தெறிந்து தின்றே பழக்கப்பட்ட மிட்டா மிராசுகளின் வாலாட்டத்தை அடக்கி வைத்து உழவர்களை துன்பச் சகதியில் தள்ளாதிருக்க வேண்டும்.

வெறும் காகிதத்திலேயே விசாரணையையும் உதவியையும் நடத்தி முடித்துவிடாதபடி, வரண்டு விட்ட அவர்களின் கைகளை உதவியால் வளப்படுத்த வேண்டும்.

பரம்பரை வழக்கப்படி ஊர்ப் பெரியவர்களுக்கும் அதிகாரிகளுக்குக் 'கிம்பளம்' கொடுப்போருக்குமே சர்க்காரின் உதவி சேர்ந்து விடா வண்ணமிருக்க வேண்டும், இந்த நிவாரணம்.

இத்தனை உதவிகளையும் இந்த மாநில அரசு செய்தாக வேண்டும். அதோடு மிக முக்கியமாக வரண்டுவிட்ட ஏரிகளைச் சீர்படுத்தி வழிந்தோடும் மழைக் காலத்து நீரை இனியாவது தேக்கி வைத்திட வழி செய்தல் வேண்டும்.

இத்தனை கோரிக்கைகளை யார் நிறைவேற்றுவது என்று அவர்களுக்கேயுரிய ஆணவப் போக்கோடு கேட்பார்களேயானால்—

பஞ்சம் வந்த பின்னர் பதறித் துடிக்காமல் 'வருமுன் காத்து நிற்க' போன்று முன்னெச்சரிக்கை வேலைகளைச் செய்ய மறந்தார்களேயானால்—

எதிர்க்கட்சிக்காரர்களை—குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தவரைத் தேர்ந்தெடுத்தனுப்பிய அப்பகுதியின்பேரிலுள்ள எரிச்சலை அழுக்கு நிறைந்த உள்ளங்களின் அடியிலே மறைத்து வைத்துக் கொண்டு அந்த மாவட்டத்தையே பஞ்ச நிலைக்கு தள்ளி விடுவார்களேயானால்—

ஒரு கட்சி சார்புள்ள இவ்வரசினரின் வாழ்க்கை வரலாற்றில் பெரிய முற்றுப்புள்ளி விழுந்துவிடும்.

இவர்களின் கதை சோககீதத்துடன் முடிந்துவிடும்!

ஏனெனில் உலகத்திற்கே உணவளித்துக் காக்கும் உழவனின் கண்ணீர் தங்களைத் துன்பத்தில் ஆழ்த்திய ஊராள்வோரை எளிதில் விடாது; இது வரலாற்றுத் தீர்ப்பு!

சூடு பிறக்குமா?

வடக்கிலிருந்து வந்தவருக்கெல்லாம் வாழ்த்துப்பா பாடி, வண்ணமலர் மாலைகளை அவர் தம் கழுத்து நிறையப் போட்டு, வயிறும், வாயும் நிறைந்து மகிழும் வண்ணம் வகை வகையான விருந்துகள் வைத்துக் கொண்டிருக்கும் தென்னகத்து நகரசபைகளின் கவனத்தைத் திருப்புகின்ற முறையில் ஒரு அழகுக் கருத்தை வெளியிட்டிருக்கிறார், வடநாட்டை நன்கறிந்த டாக்டர் ஏ. இராமசாமி அவர்கள்!

"நமது மாநிலத்திற்கு வரும் வடநாட்டவருக்கு, தயக்கமோ, தடையோ இல்லாமல் இங்கு தாராளமாக 'வரவேற்பு இதழ்'கள் வழங்கப்படுகின்றன; ஆனால், மற்ற மாநிலங்களில் இத்தகைய பண்பாடுகள் காணப்படவில்லை. சென்னைத் தலைவர்களில் ஒரு சிலருக்கே இம்மாநிலத்திற்கு வெளியே வரவேற்புகள் அளிக்கப்பட்டுள்ளன"

வரவேற்பு வாசித்துக் கொடுப்பதிலே தன் வாழ்வைக் கெடுத்துக் கொண்ட இந்தத் தென்னகத்துச் சமுதாயத்திற்கு இனியாவது சூடு பிறக்குமா?

தி. மு. க: வாப்பா, என்ன ஒரே உற்சாகமாக வருகிறாய்?

காங்கிரஸ்: பின்னே என்ன, வைஸ்சேர்மன்கள் பல நகரங்களிலே எங்கள் கட்சிக்காரர்கள்தானே வந்திருக்கிறார்கள்?

தி. மு. க: ஓ, அதுதான் இவ்வளவு சந்தோஷமா? பல நகரங்களில் உங்கள் கட்சிக்காரர்கள் என்றால் சில நகரங்களில்....?

காங்: அது....அது....அதுதான் தெரிந்தது ஆயிற்றே!

தி. மு. க: அதைச் சொல்லக்கூட உனக்கு வாய் வரவில்லையே நண்பனே! எதிர்க்கட்சிகாரனின் வெற்றியை சொன்னால் உங்கள் நாக்கென்ன அழுகிவிடுமா? அவன் வெற்றியைப்பற்றி எழுதினால் உங்கள் பத்திரிகை தானாக தீப்பற்றி எறிந்துவிடுமா? ஜனநாயகம் ஜனநாயகம் என்று வாய்ப்பந்தல் போட்டுப் பயனில்லை நண்பா, நடைமுறையில் நாடறியக் காட்ட வேண்டும்!

காங்: இந்தா, நீ எதைப்பற்றி வேண்டுமானாலும் குறைகூறு. ஆனால் எங்கள் ஜனநாயகத்தைப் பற்றி மாத்திரம் குறை கூறாதே! அடுக்காத செயல் உனக்கு. அமெரிக்கா புகழ்கிறது; இங்கிலாந்து வாழ்த்துகிறது; இன்னும் உலக நாடுகள் அத்தனையும் பாராட்டியிருக்கின்றன, எங்கள் பாரத நாட்டின் ஜனநாயகத்தை!

தி. மு. க: கொஞ்சம் பொறு; நேற்றுவரை தோளோடு தோள் போட்டுக் கொண்டு 'இந்தி-சீனி பாய், பாய்' என்று பாடினார்களே அந்தச் சீனர்கள்—இப்போது உங்களைப் பார்த்து "இந்திய மண்ணாசைக்காரர்கள்....' — என்று வசைமாரி பொழிந்திருக்கிறார்கள் என்பதையும் நினைவில் வைத்துக் கொள்!

காங்: நண்பரே! நாங்கள் கொடுத்த ஜனநாயகப் பாடத்தைத் தாங்க முடியாமல் இப்படிக் கதறுகிறீர்கள்....பாவம்!

தி. மு. க: ஜனநாயகப் பாடமா? நீங்களா? எங்கு எப்போது எங்களுக்குத் தந்தீர்கள்?

காங்: என்ன நண்பரே, அதற்குள் மறந்து விட்டீர்களே! நாங்கள் இங்கே, சென்ற வாரத்தில், ஜனநாயகத்தை மெச்சி நடந்த விதத்தை முன்னிட்டு தினசரிப் பத்திரிகைகளிலெல்லாம் கொட்டை எழுத்தில் போட்டிருந்ததே!

தி. மு. க: நீங்களா, ஜனநாயகத்தைத் தமிழகத்தில் மதித்து நடந்தீர்களா?

காங்: நண்பரே, என்ன அதற்குள் மறந்து விட்டதாக நடிக்கிறீர்களே? நாங்கள் காட்டிய உயர்தர 'ஜனநாயகப் பண்பால்' உங்கள் முகம் நாணம் காட்டுகிறதே! இன்னும் தெரியவில்லையா? சென்னை கார்ப்பரேஷனில் 'வாக்அவுட்' நடத்தி, உங்களைத் தலைகுனிய வைத்தோம்; நினைவு இருக்கிறதா?

தி. மு. க: ஆமாம், நீங்கள் எதற்கு 'வாக் அவுட்' நடத்தினீர்கள்?

காங்: நீங்கள் ஜனநாயகத்தை சரியாக மதிக்கத் தெரியாமல் நடந்ததற்கு—அதாவது நிதி, கல்வி கமிட்டிகளில் எங்களுக்குரிய இடங்களை நீங்கள் தர மறுத்ததற்கு........

தி. மு. க: அப்படியெனில் ஜனநாயகத்தின் முன்னோடிகளான நீங்கள் நகரசபைகளில் எதிர்க்கட்சிகளுக்கு அதிகப்படியான இடங்கள் இதுவரை தந்திருக்கிறீர்களா?

காங்: ஏன் நாங்கள் சட்டசபையில்.......

தி. மு. க: நான் கேட்பது நகரசபையில்......

காங்: ....

தி. மு. க: நீங்கள் கார்ப்பரேஷன் கமிட்டிகளில் கேட்ட இடம் எவ்வளவு?

காங்: மூன்று. அதோடு நகர நல முன்னணிக்கு இரண்டு கேட்டோம்.

தி. மு. க: 37 அங்கத்தினர்களான நீங்கள் கேட்டது மூன்று இடம். 12 அங்கத்தினர்களைக் கட்டி வைத்திருக்கும் நகர நல முன்னணிக்கு இரண்டு இடம் எப்படிக் கேட்டீர்கள்? உங்களுக்கு நீங்கள் கேட்டு வாங்கிக் கொள்வது தானே முறை; அப்படியிருக்க அவர்களுக்கு ஏன் வக்காலத்து வாங்கிக்கொண்டு இடம் கேட்டீர்கள்? உங்களுக்கும் அவர்களுக்கும் அப்படியென்ன உடன்பாடு; கொள்கைப் பிணைப்பு?

காங் ....

தி. மு. க.: மற்ற கட்சிகளுக்கும் இடம் கிடைக்க வேண்டும் என்ற பொது நல எண்ணம் இருக்குமானால் கம்யூனிஸ்ட்களுக்கும், பிறருக்கும் முறையே இடம் கேட்டிருக்க வேண்டாமா? அப்படியேன் கேட்கவில்லை?

காங்: ....

தி. மு. க.: நண்பரே! இதற்காவது பதில் சொல்லுங்கள்; 37 அங்கத்தினர்களுள்ள உங்கள் கட்சிக்கு கமிட்டியில் எவ்வளவு இடம் கேட்டீர்கள்?

காங்: மூன்று.

தி. மு. க: 12 நபர்களுள்ள நகர நல முன்னணிக்கு?

காங்: இரண்டு.

தி. மு. க.: ஆக, ஐந்து! கமிட்டியில் இருக்க வேண்டிய அங்கத்தினர்கள் எத்தனை!

காங்: ஏழு.

தி. மு. க: ஏழு பேருள்ள கமிட்டியில் நீங்கள் கேட்பது ஐந்து. மீதியிருக்கும் இரண்டு இடங்களிலும், கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஒரு இடம் போக, எங்களுக்கு ஒரு இடமா? ஒரு லட்சத்திற்கதிகமான ஓட்டுகள் பெற்றுவந்த 45 பேருக்கு ஒரு இடமா?

காங்: ....

தி. மு. க: வயிற்றைப் பிடித்துக்கொண்டு வாய் கிழிய "ஜனநாயகம்; ஜனநாயகம்!" என்று கத்துகிற என்னருமை காங்கிரஸ் நண்பனே! இம்மாதிரி ஜனநாயகத்தை எங்கே கற்றீர்கள்? 'ஒத்துழைப்புத்தர இருந்தோம். ஆனால் அவர்கள் நாங்கள் கேட்ட இடத்தைத் தரவில்லை. எனவே, நடத்துகிறோம், குழப்படி'—என்று உங்களுக்குவாழ்வில்லா வருங்காலத்தில் நகரில் குழப்பத்தை உண்டுபண்ணி சந்தடி சாக்கில் கந்தப் பொடி விற்கும் கடை கெட்ட செயலைச் செய்வதற்குத்தானே இந்த 'விசித்ர ஜனநாயகம்' பேசினீர்கள்? 'வாக் அவுட்' நர்டகம் நடத்தினீர்கள்? ஏன் மௌனம்? பதில் சொல்! என்ன, என்ன? நில், நண்பா, எங்கே ஓடுகிறாய்!

புதுவையின் போர்க்கோலம்!

"வெள்ளையன் ஆண்டான்; வறுமை தாண்டவமாடிற்று! கொள்ளையன் வந்தான்; கொடுமைகள் மலிந்துவிட்டன! அந்த வேண்டாதவனை விரட்டி அடிக்கப் பெரும்படை தயாராகிவிட்டது! ஆற்றல் மிக்கவர்களே; அணிவகுப்பீர்!"

—என்று வரவேற்றார், வரவேற்புக் குழுத் தலைவர், ஏ. கோவிந்தசாமி அவர்கள்!

"இந்த வையகமே மூக்கில் விரல் வைக்கும் வளமெல்லாம் நமக்குண்டு; ஆனால் வாழ்வில்லை! அதைத் தட்டிப் பறிக்கும் வடதிசைக் காவலர்களை எதிர்க்கத் தயாராகிவிட்டது தென்னகம் என்பதையே இந்த மக்கள் பெருவெள்ளம் காட்டுகிறது!"

—என்றார், மாநாட்டைத் திறந்து வைத்த வழக்கறிஞர் கோகுலகிருட்டினன் அவர்கள்!

"இந்தியா ஒன்றென்பது எக்காலத்திலும் இல்லாத ஒன்று! ஆண்டுகள் பலவாக வாழும் இந்த வரலாற்றை அலகாபாத் பண்டிதர் பொய்யாக்கலாமா? இனியும் அது நீடிக்கலாமா?"

—என்று வினா எழுப்பினார், தலைமை வகித்த வழக்கறிஞர் எம். பி. சுப்பிரமணியம் அவர்கள்!

"தம்பி கருணாநிதி புத்துணர்வு பெற்றுப் பொலிவுடன் திகழும் இந்தப் புதுவையிலேதான் தான் ஒருமுறை தெருநாயைப் போல் அடித்து வீழ்த்தப்பட்ட கொடுமையைச் சொன்னார்! அன்று அடிபட்டோம்; இன்று அணைக்கப்படுகிறோம்! அடிபட அடிபடத்தான் நாம் வளருகிறோம், அரைக்க அரைக்க மணம் வீசும் சந்தனத்தைப் போல..."

—என்று பழங்கதை சொல்லி, புத்துணர்வு ஊட்டினார்கள், அறிஞர் அண்ணா அவர்கள்!

—புதுவையில் இத் திங்கள், 2, 3 நாட்களில் நடைபெற்ற கழக மாநாட்டிலேதான் இந்தக் கருத்துரைகள் வழங்கப்பட்டன!

உரிமைக்குப் போராடி உயிர் கொடுத்த உத்தமன் மஜீத்தின் பெயரிலே அரங்கு — கலையோடு கொள்கைகளைக் குழைத்துத் தந்த கலைவாணர் பெயரிலே பந்தல்—அங்கே ஆயிரக் கணக்கான ஆற்றல்மிகு மறவர்கள் —இப்படியாக 'வெற்றி; வெற்றி' என்று பெருமிதத்தால் நெஞ்சங்கள் விம்முகிற அளவுக்கு மாநாடு நடந்தேறியது!

"இருநூறு ஆண்டு காலம் எட்டியிருந்த பிரஞ்சுக்காரனிடம் அடிமைப்பட்டுக் கிடந்தோம்; ஒருநாள் விடுதலை பெற்றோம்; நம் வேதனைகள் கரையுமென்று கருதினோம்; ஆனால் ஏமாந்தோம்! சிங்கத்தின் பிடியிலிருந்து தப்பி புலி வாய் நுழைந்த கதையாகிவிட்டது எம் வரலாறு! இந்திய ஏகாதிபத்தியக் கொடுமையிலிருந்து விடுபடும் அந்த நன்னாளைத்தான் எதிர்நோக்கிக் காத்திருக்கிறோம்!"

—என்பதை புதுவை மக்கள் நிரூபித்துக் காட்டிவிட்டார்கள்!

அப்படியொரு வாய்ப்பை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்த வரவேற்புக் குழுத் தலைவர் ஏ. கோவிந்தசாமி, செயலாளர்கள் வழக்கறிஞர் பெருமாள், கவிஞர் புதுவை சிவப்பிரகாசம்—ஆகியோர் திராவிடத்தின் நன்றிக்கு உரியவர்கள்!



மாநாட்டு முகப்பு இது. [அன்பளிப்பு: 'தென்னகம்']

"திராவிடன்"
புதிய தொலைபேசி எண்:
62679



ஓடிவந்த தலைவன்; தலாய்லாமா!

மண்ணாள ஏற்றவர்கள் இன்னலுற ஏற்றவர்கள். என்ற விதிக்குட்பட்டு, சீனத்துப் பீரங்கிகள் துரத்திட இந்தியத் துணைக் கண்டத்தை நோக்கி ஓடி வந்தார், 'நடமாடும் புத்தர்' என்ற பெயரைப் பெற்ற திபெத்தின் தலாய்லாமா!

நிலவு குளிர்வார்க்க, காற்று நெளிந்து மெல்லிசை எழுப்ப 'லாசா' எனும் தலைநகரில் சுக வாழ்க்கை வாழ்ந்து வந்தவர், கல்லும் முள்ளும் காலில் குத்திட அதனைக் கண்ட மற்றவர்கள் கழுதை யொன்றின் மேல் அமர்த்தி அழைத்துவர வேண்டிய நிலைக்கு ஆளானார்!

—சீனத்தின் வெறுப்பை சம்பாதித்துக் கொண்ட இந்தத் தலாய்லாமாவின் வாழ்வும் இவர் ஆண்டு வந்த திபேத் நாடும் வேதனை கலந்த வேடிக்கைக் கதைகள் பல கூறும்!

'குப்லாய்கான்' எனும் மங்கோலியப் பேரரசனின் மனதைப் புத்த சமயத்தில் திருப்பி விட்டதற்குப் பரிசாக, அவனால் அளிக்கப்பட்ட திபெத் பூமிக்குத் தலைவரானார், ஒரு புத்த சமயக் குரு!

பின்னர் டிசோங் எனும் திபெத்திய அதிபர் கெலுக்—பா எனும் மஞ்சள் தொப்பியணியும் பழக்கமுடைய குருமார்களுக்குப் பெரும் செல்வாக்கைத் தேடி வைத்தார். அதோடு அந்த 'மஞ்சள் தொப்பி'களின் தலைவருக்குத் 'தலாய் லாமா' என்ற பட்டத்தையும், அவருக்கு அடுத்த பதவியில் இருக்கும் குருவிற்குப் 'பஞ்சன் லாமா' என்ற பட்டத்தையும் தந்தார்!

[தலாய் என்றால் அறிவுக் கடல் என்றும், பஞ்சன் என்றால் குரு என்றும் பொருள்!]

இப்படி இரு தலைவர்களை ஏற்படுத்தியதன் மூலம் திபெத்தில் நீங்காக் கலகத்திற்கு வித்திட்டு விட்டார் அவர்! தலாய்லாமாவும், பஞ்சன்லாமாவும் அதிகாரப் போட்டியில் முறையே இந்தியா, சீனாவின் அடைக்கலத்தைப் பெற்று வந்திருக்கின்றனர்.

இந்தப் போட்டிகளை, சண்டை சச்சரவுகளை சகித்துக் கொண்டு அந்த நாட்டு மக்கள், மதம் சொல்லியதிலிருந்து விலகாமல் நடந்து வருகிறார்கள்.

மொத்த மக்கட் தொகையில் ஐந்தில் ஒருவர் பிழைப்பதற்கு மீதி நான்கு பேர்கள் உழைக்கிறார்கள்—அதாவது உழைக்காமல் உண்ணுகின்ற மதக் குருக்களின் கூட்டம், மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பாகமாகும்!

பெரும் பெரும் சொத்துக்கள் பிரிந்து போகாமலிருக்க ஒரு விசித்திர வழியை அந்த நாட்டுப் பிரபுக்கள் கையாளுகிறார்கள். ஒரு மனைவியுடன் மூன்றுபேர் வாழ்க்கை நடத்துவதும் பிறந்த குழந்தைகள் அனைத்தும் பெரியவனின் குழந்தைகளாக பாவிக்கப்படுவதுமே அந்த வழி!

சமீபத்தில் கூட, ஓர் உயர்தர குடும்பத்தைச் சார்ந்த பெண் முறையே ஒரு பிரபுவுக்கும், திபெத்திய வெளிநாட்டு அமைச்சருக்கும், அவருக்கு இன்னொரு மனைவியின் மூலம் பிறந்த பையனுக்கும் திருமணம் முடிக்கப்பட்டிருக்கிறாள்.

உலகத்தின் கூரை எனப்படும் இந்நாட்டில் மூடப் பழக்க வழக்கங்களும் உச்சாணிக் கொப்பிலே அமர்ந்துள்ளன; இங்கு தங்கம் தாராளமாய்க் கிடைக்க வசதியிருந்தும், அதைத் தோண்டி எடுத்தால் பூமியைக் காக்கும் கடவுள்கள் கோபிப்பார்கள் என்ற நம்பிக்கை பலமாக இருப்பதால் தங்கம் தரையில் இங்கு தூங்கிக் கொண்டிருக்கிறது.

இது மட்டுமல்ல, திபெத்தியரின் சாவு கூட நமக்கு அருவருப்பு இழைந்த ஆச்சரியம் தருகிறது. திபெத்தியன் ஒருவன் இறந்து விட்டால் அவன் சடலம் மலைமுகட்டிற்குக் கொண்டு செல்லப்படுகிறது. அங்கு உடலில் ஒட்டியிருக்கும் சதைகளையெல்லாம் வெட்டியெடுக்கிறார்கள், சிலர்! எலும்புகளை எடுத்துக் கொண்டு, சதைகளை காக்கைக்கும் பருந்திற்கும் காட்டு மிருகங்களுக்கும் உணவாக்குகிறார்கள். தந்தையின் மண்டை யோட்டில் அவனுடைய மக்கள் நீரருந்தும் பழக்கம், விசேஷ சமயங்களில் உண்டாம்.

திபெத்தியர்கள் தங்கள் விருந்தினர்களை நாக்கை நீட்டி வரவேற்பார்களாம்!

அந்த மக்களுடைய வாழ்க்கை காட்டு மலர் அல்லது கல்லைப் போன்ற வாழ்வுதானும். உழைப்பது; மழை வந்தால் ஒடுங்குவது; சூரியன் வந்தால் குளிரைப் போக்கிக் கொள்வது; இனிமையான மாலை நேரங்களில் பாடுவது; பொதுவாக மகிழ்ச்சியுடனும், அறிவுடனும் வாழ்வது—இவைதான் அந்த மலை நாட்டு மக்களின் வாழ்க்கை.

இந்த வாழ்க்கையை அப்படியே கட்டிக் காப்பதும், மத நம்பிக்கையை மென்மேலும் வளர்த்துவதும்தான் தலாய்லாமாவின் முக்கியக் கடமை.

தலாய்லாமா என்பவர் தேர்ந்தெடுக்கப்படுபவரோ அல்லது பரம்பரை வழியாக வருபவரோ அல்ல; சாவுப் படுக்கையில் இருக்கும் முன்னைய தலாய்லாமா தான் எங்கே பிறப்பேன் என்பதைப் பற்றி ஏதாவது குறி சொல்லிவிட்டு இறந்து விடுவார். அதை உடனே அறிவித்து விடாமல் அடுத்த நாள்தான் அறிவிப்பார்கள்; ஏனெனில் எல்லோரும் லாமா இறந்த நாளில் தங்கள் குழந்தை பிறந்ததாகக் கூறி விடுவார்களாம். பின்னர்... அந்த லாமாவின் ஆவி புகுந்து கொண்டிருக்கும் அந்தக் குழந்தையைத் தேடிக் கண்டு பிடிப்பதில் ஈடுபடுவார்கள். தலாய்லாமா பீடத்திற்குரிய குறிகள் பலர் படைத்திருந்தால், சில தேர்வுகள் நடக்கும். அதிலும் தேர்ந்துவிட்ட பையன்தான் தலாய்லாமா! அவனுக்கு லாசா நகரம் தலை வணங்கும்!

சங்கு ஊதி, முரசம் கொட்டி ஆயிரக்கணக்கான லாமாக்கள் துதிபாடுவர்!

'மக்கள் ' நடமாடும் புத்தர்' எனப் புகழாரம் சூட்டுவார்கள்.

இதே முறையில்தான், இப்போது இந்தியாவில் அடைக்கலம் புகுந்திருக்கும் தலாய்லாமாவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவருக்கு முந்தைய தலாய்லாமா சாகும்போது "ஆ....கா....மா" என்று சத்தமிட்டுக் கொண்டே இறந்தாராம். இது வருங்கால தலாய்லாமாவினுடைய தாயின் பெயராக இருக்கலாம் என்று ஒரு புத்த குரு சொன்னாராம். அடுத்தபடி அந்தத் தலாய்லாமாவைச் சவக்குழியில் இறக்கும்போது தலை தெற்குப்புறமாகத் திரும்பிற்றாம். வருங்காலத் தலாய் லாமா தெற்கே இருப்பதாக முடிவு செய்தனர், மற்ற லாமாக்கள்! ஆனால் அடுத்த தடவை அந்தப் பிணம் வடகிழக்காகத் திரும்பிற்றாம். உடனே லாமாக்கள்கூடி தலாய் இருக்க வேண்டிய இடத்தைக் கணக்கிட்டுப் பார்த்தனர்.

முந்தைய தலாய்லாமா கட்டளையிட்டுச் சென்ற இருதிசைகளிலும் தேடினார்கள்.

சீன கவர்னர் ஒருவரின் அதிகாரத்திற்குட்பட்ட 'கோகோநோர்' மாநிலத்தில், லாகாமோ டோன்டப் எனும் பெயருடன் ஒரு சிறுவன் இந்த லாமாக்களின் கண்களில் அகப்பட்டான்.

இவர்கள் வருவதைப் பார்த்த அவன் "லாமா! லாமா!"—என்று கூறினானாம். இந்தத் 'தெய்வீக சக்தி'யை உடைய அவனை உடனே பரிசோதித்துப் பார்த்தார்களாம், லாமாக்கள்!

அந்தப் பையனிடம் தலாய் லாமாவுக்குரிய புலித்தோலிலுள்ள புள்ளிகள் காலில் இருந்ததாம்! நீண்ட காதுகளும், மேற்புறம் வளைந்த புருவங்களும் இருந்தனவாம்! தெய்வத்தைப் போல நான்கு கைகள் இருப்பதற்கு அடையாளமாக இரு தோளிலும் எலும்புகள் வெளியே முட்டிக் கொண்டு நின்றனவாம். பெற்றோர்களுக்கு பிரபுப் பட்டமும் நிலபுலமும் தந்து, அந்தப் பையனை அழைத்துக் கொண்டு வரும்போது சீன கவர்னர் தடுத்துக் கொண்டானாம். லாமாக்கள் அவனுடன் பேரம்பேசி 30,000 டாலர் கொடுத்தார்களாம். என்றாலும் எல்லையைக் கடக்கும்போது மீண்டும் அந்தக் கவர்னர் தோன்றி 90,000 டாலர் கொடுக்கச் சொன்னானாம். பின்னர் வருஷத் தவணைகளில் அந்தப் பணத்தைக் கட்டினார்களாம், லாமாக்கள்!

இப்படி பல சிறுவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதால் மறுபடியும்

[தொடர்ச்சி பக்கம்—10]

- நாடு பிடிக்கும் ஆசை கொண்டு, பீரங்கி வேட்டுகளின் ஒலியில் சுதந்திர வேட்கையை அடக்கி விடலாம் என்ற எண்ணம் கொண்ட சீன ஏகாதிபத்யவாதிகளின் கையிலிருந்து தப்பி புத்தன் பிறந்த நாட்டிற்கு ஓடிவந்த புத்த மதத் தலைவன்...
- உலகத்தின் கூரை எனும் திபெத்தில் மூடநம்பிக்கைகளின் அரியாசனத்தில் அமர்ந்து, ஆண்டுக்கொரு தரும் அழுக்கைக் கழுவும் பழக்கம் கொண்ட மலை நாட்டு மக்களின் தலைவன்...
- உலகத்தார் கவனத்தை யெல்லாம் தன் பக்கம் திருப்பிய இந்த திபெத்து நாட்டுத் தலாய்லாமாவின் 'தெய்வீக' வாழ்வுக்குப் பின்னாலே மறைந்திருக்கும் கண்மூடித்தனமான கொள்கைகள், அந்த நாட்டு மக்களின் பிற்போக்கு வாழ்க்கை, அந்தப் பிற்போக்கு இருட்டிலும் ஒளிவிடும் சுதந்திர எண்ணம் இவற்றை விளக்குகிறது, இக்கட்டுரை.

ரோமாபுரிப் பாண்டியன்

மு. கருணாநிதி

கி. மு. 29-ல் மகிமை பொருந்திய மாவீரன் என்ற விருதுபெற்று உலகமெங்கும் ரோம் சாம்ராஜ்யத்தின் ஒளிக் கதிர்கள் ஊடுருவிச் செல்வதற்கான வழிவகுத்த அகஸ்டஸ் சீசரின் காலத்தை ரோம்நாட்டு வரலாறு 'தங்க ஏடு' எனச் சிறப்பித்துக் கூறுகிறது. டான்யூப் நதியும் ரைன் நதியும் வடக்கெல்லையாக அமைக்கப்பட்டு, வடகிழக்கே கருங்கடலைக் கொண்டு, தெற்கே அராபிய பாலைவனத்தின் விளிம்புகளைத் தொட்டு, மேற்கே அட்லாண்டிக் கடலை எல்லையாகப் பெற்ற ரோம் சாம்ராஜ்யம் உலகத்தின் கண்களிலே பட்டொளி பாய்ச்சிக்கொண்டிருந்தது.

இத்தகைய ஒரு பெரும் அரசை நிறுவிய பெருமை அகஸ்டசுக்கே உரியதாகும். அந்தணிக்கும் அகஸ்டசுக்கும் நடைபெற்ற போராட்டங்களின் முடிவு, அந்தணி பக்கம் வெற்றியை அளித்திருக்குமானால் ரோம் நாட்டின் தலையெழுத்து வேறு மாதிரியிருந்திருக்கக் கூடும்.

ரோம் பேரரசை நிலைநாட்டுவதற்கென அகஸ்டசுடன் அந்தணியும் சேர்ந்தே பாடுபட்டான். ஆனால் அந்தணியின் ஆற்றலையும் வீரத்தையும் எகிப்து நாட்டுக்கிள்ளை தனக்கு அடிமையாக்கிக் கொண்டது. ரோம் நாட்டுப் பாராளு மன்றத்தில் அந்தணி, தனது மதிப்பை இழக்க ஆரம்பித்தான். முதலிலே அகஸ்டசுக்கு அந்தணியின் போக்கு வருத்தத்தையே தந்தது. அவனைத் திருத்தி, திறமை முழுவதையும், திண்தோள் பலத்தினையும் ரோம் நாட்டின் வளர்ச்சிக்கே ஆக்கிட வேண்டுமென விரும்பினான்.

அந்தணியோ, சீசர் சாய்ந்து கிடந்த சிங்காரியின் மடியில் ஜெகமே இருப்பதாகக் கருதினான். அவள் இதழ்த் தேனைப் பருகிட முனையும்போது சுருக்கெனக் கொட்டும் தேனீக்கள் போல அவளது விழிகள் அலைந்து கொண்டிருக்கின்றன—என்று நைல் நதிக் கரையிலே நின்று நீரிலாடும் நிழலுக்குக் காதல் கதை கூறிக் கொண்டிருக்கும் அந்தணியை எப்படியும் ரோமுக்குத் திரும்ப அழைத்துவிட வேண்டுமென்று அவன் முதல் மனைவி துடியாய்த் துடித்து அதன் காரணமாகவே அகஸ்டசுடன் போரிட்டு, இறுதியில் மடிந்தாள்.

அகஸ்டசுக்கு அந்தணியின் மனத்தைத் திருப்ப ஒரே ஒரு மார்க்கந்தான் புலப்பட்டது. அகஸ்டஸ், தன் அருமைத் தங்கையை அருகே அழைத்தான்.

"அன்புள்ள ஆக்டேவியா! ரோம் சாம்ராஜ்யத்தின் எதிர்காலத்தை எண்ணி உன்னையொன்று கேட்கப் போகிறேன். நீ சம்மதம் தர வேண்டும்!" என்றான்.

அழகுப் பதுமையாம் ஆக்டேவியா, அண்ணனின் வார்த்தைக்கு அதுவரை மறுவார்த்தை பேசி அறியாதவள். "என்ன செய்தி?" என்றாள்.

"அந்தணியின் புஜபல பராக்கிரமம் நன்கு தெரியுமல்லவா உனக்கு?" — அண்ணன் ஆரம்பித்தான்!

நாணத்துடன் தலையசைத்தாள் தங்கை!

"அழகன்! ஆற்றல் மிகுந்தவன்! ஆனை பலமுண்டு அவன் தோளுக்கு! வாளுக்கு எதிர் நிற்க வையகத்தில் யாருமில்லை! இதையெல்லாம் நீ அறிவாய் அல்லவா?"

"தெரியும் அண்ணா! சொல்ல வந்ததைத் தெளிவாகச் சொல்லு முதலில்!"

"அந்த வீரன் கூட்டுறவை நான் இழக்க விரும்பவில்லை. ஆனால் அந்த உறவு நாளுக்கு நாள் அறுந்து கொண்டே போகிறது. அந்தணியின் மனைவியாக இதுவரை இருந்தவள் அவனுக்குத் தகுதியானவள் அல்ல. நல்ல காலம்; அவள் செத்துத் தொலைந்தாள். அவள் இறந்து போனதும் எனக்கும் அந்தணிக்கும் புது நட்பு உதயமாகியிருக்கிறது. இந்த நட்பை பலப்படுத்திக் கொள்ள ஒரே வழிதான் எனக்குத் தெரிகிறது. அந்த வழியினால்.......எங்கள் நட்பும் செழிக்கும்; அதே சமயத்தில் எகிப்தில் அந்தணிக்கு ஏற்பட்ட மயக்கமும் குறையும்!"

"இன்னும் பீடிகையில்தானே அண்ணா இருக்கிறாய்?"

"இல்லை ஆக்டேவியா!......நீ அதிர்ச்சி அடைந்துவிடக் கூடாது. பார்! அதற்காகவே விஷயத்தைப் போர் முரசு போலக் கொட்டி விடாமல், வீணைத் தந்திகளைத் தட்டுவது போல் மெது மெதுவாகத் தந்து கொண்டிருக்கிறேன்!"

"இனிமேலும் என் ஆவலைத் தூண்டி இருதயத்தை ஊதி ஊதி வெடித்துவிடச் செய்யாதே, அண்ணா!"

"அந்தணியை உனக்குப் பிடிக்கிறதா?"

"பிடிக்காமல் என்ன; மகா வீரனான நீயே அவரை வீரன் என்று ஒத்துக் கொண்டிருக்கிறாயே?"

"பிடிக்கிறதா என்று நான் கேட்பதின் பொருளைப் புரிந்து கொண்டுதானே நீயும் பதில் கூறுகிறாய்?"

"மறுபடியும் குழப்புகிறாயே; என்ன சொல்ல வந்தாய்? சீக்கிரம் சொல்!"

"ஏன் பறக்கிறாய்? அந்தணியைப் பற்றிய செய்தியென்றால் மட்டும் அப்படியா சுவைக்கிறது உனக்கு?"

"போண்ணா! வலுவில் வம்புக்கு இழுக்கிறாய் என்னை!"

புகுமுன்

"அந்தணிக்கும் கிளியோபாட்ராவுக்கும் உள்ள உறவைப் பற்றி நீ என்ன கருதுகிறாய்?"

"கிளியோபாட்ரா அதிர்ஷ்டசாலி என்பதே என் அபிப்பிராயம்!"

"உலகத்திலேயே நீதான் இப்படிச் சொன்ன முதல் ஆள்! கிளியோபாட்ராவின் அழகை வர்ணித்து அவளைத் தன் காதலியாக ஆக்கிக் கொண்டவர்களின் அதிர்ஷ்டத்தையே இதுவரை உலகத்தினர் புகழ்ந்தனர். நீயோ முற்றிலும் மாறுபட்ட அபிப்பிராயம் கூறிவிட்டாய். காரணம் எனக்குப் புரிந்துவிட்டது. நீயும் அந்தணியைக் காதலிக்கிறாய்!"

"போண்ணா!"—அவள் ஓடுகிறாள். அகஸ்டஸ் தடுத்து, "நில்லு நில்லு! அந்தணிக்கும் உனக்கும் திருமணம் நடத்த முடிவு செய்திருக்கிறேன்!" என்றதுதான் தாமதம்; ஆக்டேவியாவினுடைய அழகுக் கன்னங்கள் மிளகாய்ப் பழத்தின் அடிப்பாகம் போல் 'குபீர்' என்று சிவந்துவிட்டன.

அந்தணி—ஆக்டேவியா இருவரின் மணவிழா ரோம் நாட்டுப் பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டது. போர்க் காலங்களில் அகஸ்டசுக்கு எதிர்ப்பாக நின்று வெளிநாடுகளுக்கு ஓடிவிட்டவர்கள் எல்லாம் மன்னிக்கப்பட்டு மணவிழாவுக்கு அழைக்கப்பட்டனர். அந்தணியும் ஆக்டேவியாவும் மணவிழா முடித்து இன்ப கேளிக்கை கூடத்தில் புகுந்தனர். நைல் நதி தீரத்து நீலப்புள்ளின் இன்பத்தில் பாதியையாவது ஆக்டேவியாவிடம் பெறலாமா என்று கணக்குப் போட்டவாறு கட்டிலறைக் காவியத்தைத்தீட்டத் தொடங்கினான் அந்தணி. நிலவொளியிலே விருந்து மண்டபங்களில் ஆடிப்பாடி மகிழ்ந்தனர், அரசகுடும்பத்தினரும் சீமான்கள் வட்டாரத்தினரும்!

அந்தணிக்கும் தனக்கும் நேசம் பாசமெல்லாம் மென்மேலும் அதிகரிக்கும் என்ற திருப்தியுடன் விருந்து மண்டபத்திலே ராஜநடை போட்டுக் கொண்டிருந்தான் அகஸ்டஸ். அவன் காதிலே இன்பத்தில் தோய்த்தெடுத்த கனிச் சொற்கள் சில பல விழுந்தன. சொல்லின் இனிமை கேட்டுத் தயங்கி நின்றான். தன் அந்தஸ்தை ஒரு முறை நினைவு படுத்திக் கொண்டு நடக்க ஆரம்பித்தான். கால்கள் பூமியிலேயே ஒட்டிக் கொண்டன. நகர மறுத்தன. திரும்பினான்.

மலை போன்ற மேனி படைத்த ஆணுருவம் ஒன்றின்மீது அலை போல ஆடிக்கிடந்தாள், அழகு மயில் ஒருத்தி!

"யார் அது?" என்று கேட்டான் மெய்க்காப்பாளனை நோக்கி!

"அவர்தான் டைபீரியஸ் கிளாடியஸ் நீரோ என்ற பெரிய சீமான்!" என்று பதில் கூறினான் அவன்.

"முட்டாளே! அதையா கேட்டேன்; அந்த ரோஜாமலர் யார்?" என்று கோபத்தையும் தாபத்தையும் கலந்து குரல் எழுப்பினான் அகஸ்டஸ்.

"அவளா?....அவள்தான் அந்தச் சீமானின் மனைவி. பெயர் லிவியா!"—இது மெய்க்காப்பாளனின் பதில்.

அகஸ்டஸ், சிறு கனைப்புக் கனைத்தான். லிவியா அவனைப் பார்த்தாள். கணவனையும் உற்றுப் பார்த்தாள். அவன் மது மயக்கத்தில் தள்ளாடிக் கொண்டிருந்தான். தங்கக் கிண்ணத்தை மதுவால் நிரப்பினாள். கணவனின் வாயில் ஊற்றினாள். அவன் மயங்கிச்சோர்ந்து அவள் மீது சாய்ந்தான். சாய்ந்தவனைப் பளிங்கு மேடையில் மெதுவாகப் படுக்க வைத்தாள். இத்தனை காரியங்களைச் செய்யும் போதும் அவள் கண்கள் அங்கில்லை;

அவை அகஸ்டசின் மார்பகத்தை செங்குத்தாகத் துளைத்துக் கொண்டிருந்தன.

கணவன் அருகில் அமர்ந்தவாறு அகஸ்டசின்மீது பதித்த விழிகளை மேலும் மேலும் ஆழமாக அவன் நெஞ்சத்தில் அழுத்திக் கொண்டிருந்தாள். அகஸ்டஸ் புன்னகை புரிந்தான். அவள் புன்னகை புரியவில்லை; கண்ணால் சொன்னாள்.

அகஸ்டஸ், தன் நீண்ட கரத்தை அவள் முன் நீட்டியவாறு வாட்டசாட்டமாக நின்றான். லிவியா எழுந்து விட்டாள். இருவர் கைகளும் ஒன்றையொன்று பற்றிக் கொண்டன. அருகே இழுத்தான். இழுப்பதற்கு முன் அவளே அவன்மீது துவண்டு விழுந்து விட்டாள். மெய்க்காப்பாளன் மெல்ல அந்த இடத்தை விட்டு நகர்ந்துவிட்டான்.

"இதுவரை உன்னை நான் சந்திக்காமல் இருந்தது பெருங் குறையல்லவா லிவியா?" என்று பெருமூச்சுடன் புலம்பினான் அகஸ்டஸ்.

"என்னை இதற்குமுன் சந்தித்திருந்தால் போர் மேகம் சூழ்ந்த நேரத்தில் உமக்குப் பயந்து நாங்கள் ஏன் ஊரைவிட்டு ஓடப் போகிறோம்?" என்று கண்ணீர் முத்துக்களால் அவன் இதழ்களை ஈரமாக்கினாள்.

"இனி என்றும் நாம் பிரியலாகாது. என்ன சொல்லுகிறாய்?"— இது அவன்.

"இப்போதே பிரிந்துதானே நிற்கிறீர்கள்!"— இது அவள்.

நீரோடு நீர் கலந்ததுபோல் ஒன்றாகி நின்றனர்.

"சீமாட்டியை ராணியாக்கப் போகிறேன்; சம்மதம்தானே?"

"சிம்மாசனம் தேவையில்லை எனக்கு! உமது இதயாசனமே வேண்டும்!"

"அகஸ்டஸ் இதுவரை யாருக்கும் அடிமையில்லை; இன்று முதல் லிவியாவின் நிரந்தர அடிமை!"

இதைக் கேட்டு லிவியாவின் கண்களிலே சுடரொளி கிளம்பிற்று. இதழ்கள் துடித்தன. இடை நெளிந்தது. கன்னங்களில் குழிச்சிரிப்பு தலை நீட்டிப் பார்த்தது.

"என் தங்கமே!" என்று தழுவிக் கொண்டாள்.

நிலவு ஒளிந்து கொண்டது!

விடிந்து விட்டதை வான் வெள்ளி அறிவித்தது. அகஸ்டசும் லிவியாவும் கிளாடியஸ் நீரோ என்ற லிவியாவின் கணவன் படுத்திருந்த இடம் நோக்கிச் சென்றார்கள். அங்குள்ள பளிங்கு மேடையில் கீழ்க்கண்டவாறு செதுக்கியிருந்தது:

"மன்னர் விரும்பிவிட்ட பிறகு
மனைவியென்ன; எதையும்
கொடுக்க நான் தயார்! — இப்ப
டிக்கு கிளாடியஸ் நீரோ!"

அந்த எழுத்துக்களின்மீதே இருவரும் அமர்ந்தனர். கணவனின் தியாக உள்ளத்தை லிவியா பாராட்டினாள். அகஸ்டசுக்கு சற்று முகம் மாறியது. அதை முத்தங்களால் சரிப்படுத்திவிட்டாள், அந்த முத்து நகைப் பேரழகி!

அகஸ்டஸ்—லிவியா திருமணமும் மிக விமரிசையாக ரோம் நாட்டில் கொண்டாடப்பட்டது. லிவியா ராணியானாள். 'என் மனைவி இப்போது இந்த தேசத்து ராணியாக்கும்' என்று நண்பர்களிடம் பெருமை பேசிக் கொண்டான், சீமான் கிளாடியஸ்!

லிவியா, பட்டமகிஷியானதும் தன் இடத்தை உறுதிப்படுத்திக் கொள்ளப் பெரு முயற்சிகளில் ஈடுபட்டாள். அந்தணிக்கும் அகஸ்டசுக்கும் முகிழ்த்துள்ள உறவை அரும்பிலேயே அழித்து விடக் கங்கணம் கட்டிக்கொண்டாள். அந்த உறவு முற்றுமேயானால், தன் எண்ணப்படி அகஸ்டசை ஆட்டிவைக்க முடியாது என்று லிவியா கருதினாள்.

ரோம்மீது பாம்பே என்ற ஒருவன் படையை மோத முரசு கொட்டினான். அவன் ரோமிலிருந்து தோற்றோடியவன். அவனை எதிர்ப்பதற்கு அகஸ்டஸ், அந்தணியின் துணையையும் விரும்பினான். லிவியா, குறுக்கிட்டாள்.

"உமக்கு ஆற்றல் இல்லையா? உமது கரத்தில் வலுவில்லையா? என்னை அணைத்து மகிழ மட்டுந்தான் கற்றீரோ? எதிரிகளின் உயிர் அணைக்க மாட்டீரோ?" எனக் கேலி பேசினாள் லிவியா!

அகஸ்டசுக்குத் தலையணை மந்திரம் தலைக்கேறிற்று. குழப்பமுற்றான். அந்தணி, என்ன கருதிக் கொள்வானோ என்று சங்கடப்பட்டான். நண்பர்களையெல்லாம் கலந்து யோசித்தான். அனைவருமே அந்தணியின் துணை பெற்றுப் போரில் இறங்குவதே நலமென்றனர். ரணகளச் சூரன் அகஸ்டஸ், ரசவல்லியாம் லிவியாவின் வார்த்தைகளைத் தட்ட முடியாமல் தவித்தான்.

இறுதியில் வழக்கம்போல் பெண்ணே வென்றாள். தன்னைக் கலக்காமல் அகஸ்டஸ் போர்க்களத்தை உருவாக்கிய சேதி கேட்டுக் கொதித்தான் அந்தணி. ஆக்டேவியாவுக்கு ஒன்றும் சொல்லத் தெரியவில்லை. ஒரு பக்கம் அண்ணன்—இன்னொரு பக்கம் ஆளன்! இடையில் நின்று அழுதாள்.

அண்ணனிடம் தூது சென்று இருவர் நல்லுறவை வளர்ப்பதாகக் கூறி அவள் புறப்பட்டாள்.

இதுதான் சமயமென்று அந்தணி, எகிப்துக்கு இறக்கை கட்டிக் கொண்டு பறந்தான்.

இடையில் தொய்வு ஏற்பட்டிருந்த இன்ப கேளிக்கைகளில் மீண்டும் புது முறுக்கு ஏறிற்று.

அந்தணியும் கிளியோபாட்ராவும் எகிப்தில் ஆடும் காதல் ஆட்டங்களை அகஸ்டஸ் அறிந்தான். அது பற்றிப் பகை வளர்க்கும் தோரணையில் தூபம் போட்டுக் கொண்டேயிருந்தாள், லிவியா! அப்போது தங்கை ஆக்டேவியாவும் அண்ணனிடம் அழுது புலம்பிட வந்து சேர்ந்தாள்.

"நீதானேயண்ணா திருமணத் திட்டமே வகுத்தாய். இன்று நீயே எங்களைப் பிரித்துவிட வழி வகுத்து விட்டாயே; நியாயமா?" என்று வாதத்தைத் துவக்கினாள் ஆக்டேவியா!

"போடி போ! பொல்லாத நியாயத்தைப் பிளக்க வந்து விட்டாள்!" என்று புகைகக்கினாள், லிவியா!

அண்ணியின் சொற்களில் அக்கினியைக் கண்ட அவள், அண்ணனிடம் இனிப் பாசத்தை எதிர்பார்க்க முடியாது என்று நொந்து திரும்பினாள்.

"அந்தணியை இன்னும் விட்டு வைத்தால்... ரோம் நாட்டு மகுடத்தை கிளியோபாட்ராவின் மகனுக்குத்தான் கட்டப் போகிறான். இது நிச்சயம்"—இந்த மந்திரத்தை மதுவோடும், முத்தங்களோடும் கலந்து மடி மீது கிடந்த அகஸ்டசுக்கு அளித்து வந்தாள் லிவியா! அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்! மடிமேல் மயக்கம் தந்து அகஸ்டசை மாற்றிப் போட்டாள் லிவியா!

அந்தணியைப் போருக்கு அழைத்துவிட்டான் அகஸ்டஸ்!

கி. மு. 32-ல் அந்தணிக்கும் அகஸ்டசுக்கும் போர் மூண்டது. அந்தணி, களத்திற்குப் புறப்பட்டான். அவனைத் தொடர்ந்து கிளியோபாட்ராவும் போர்க் கப்பலில் புறப்பட்டாள். போராட்டம் மிக உக்கிரமமாக நடைபெற்றது. போர் முடிவடைவதற்கு முன்பு போரின் முடிவு பற்றி ஐயங் கொண்ட கிளியோபாட்ரா, தன் கப்பல்களைத் திருப்பிவிட்டாள். காதலி திரும்புவது கண்ட அந்தணியும் அவளைத் தொடர்ந்தான். இதன் விளைவாக வெற்றி அகஸ்டஸ் கைக்குப் போய்ச் சேர்ந்தது. தோல்வி கண்ட அந்தணி மீண்டும் தன் காதலரசியுடன் துவண்டு கிடந்தான்.

நேரம் பார்த்திருந்த அகஸ்டஸ் சீசர், எகிப்தின் தலைநகரமான அலெக்சாண்டிரியாவின்மீது முற்றுகையிட்டான். எரிமலையெனக் குமுறி யெழுந்தான் மாவீரன் அந்தணி. அவனது வீர முழக்கம் கேட்டு அகஸ்டசின் படைகள் சிதறி யோடின!

ஆனால் கடைசி நேரத்தில் எகிப்திய வீரர்கள் அந்தணிக்கு எதிராயினர். காட்டிக் கொடுக்கும் பணியில் இறங்கினர். அந்தணி, கிளியோபாட்ராவின்மீதே சந்தேகங் கொண்டான். அவளை அறவே வெறுத்தான். அவளை வீட்டு விலகித் தனியிடத்தில் கிடந்தான். காதலன், தன்மீது கொண்ட தவரான எண்ணத்தைப் போக்கிட வழி தெரியாது தத்தளித்தாள் கிளியோபாட்ரா.

அப்போது அவளது தோழி, சார்மியான் அவளிடம் வந்தாள். "என்னடி செய்வேன்? என்னுடையவரின் இருதயத்தில் மீண்டும் இடங் கிடைக்காதோ எனக்கு?" என அழுதாள் அரசி.

"நான் வழி சொல்லுகிறேன்; கேளுங்கள். அந்தணியிடம் பரபரப்புடன் ஓடுகிறேன். அய்யோ; சேதி தெரியுமா? கிளியோபாட்ரா இறந்து விட்டாள் என்று கதறுகிறேன். அவர் உண்மையிலேயே உங்களை வெறுத்து விட்டாரா இல்லையா என்பதை உடனே புரிந்து கொள்ளலாம்!" என்று தந்திரம் கூறினாள் சார்மியான்.

"சார்மியான் கூறுவது சரியல்ல அம்மா! ஏதாவது விபரீதமாக நடந்தாலும் நடந்துவிடக் கூடும்!" என்று எச்சரித்தவாறு ஒரு இளம் பெண் ஓடிவந்தாள்.

தங்கப் பதுமை போன்று காட்சியளித்த அந்தப் பெண்ணுக்கு பனிரெண்டு வயதுதான் முடிந்திருக்கக் கூடும். பருவத்தின் விளிம்பைத் தொடுவதற்கு அவளது வாலிபம் உயர உயரக் கையை நீட்டிக்கொண்டு நின்றது.

அந்தப் பெண்ணைக் கிளியோ சோகத்தோடு பார்த்து, "என்னடி சொல்லுகிறாய் ஜூனோ?" என்று தழுதழுத்த குரலில் கேட்டாள்.

"சார்மியானின் யோசனை எனக்குப் பிடிக்கவில்லை" என்று கண்டிப்பாக மொழிந்தாள். ஜூனோ என்ற அந்தச் சிற்றுடைச் சிங்காரி.

"ஜூனோ சின்னப் பெண். உலக அனுபவமில்லாதவள். என்னை நம்புங்கள்!" என்றாள், சார்மியான்.

இறுதியில் ஜூனோ தோற்றாள் சார்மியான் கட்சியே ஜெயித்தது. 'கிளியோ, இறந்து விட்டாள்' என்ற பொய்ச் சேதி அந்தணிக்கு அறிவிக்கப்பட்டது. அந்தணியின் செவிகளில் செந்தேனெனச் செய்தி கொட்டியது.

அவளோடு ஆடியதும் பாடியதும் அவன் நினைவில் உருண்டன. நைல் நதி தீரத்தில் காட்சியாக்கிக் காட்டிய காதல் மகா காவியங்களை எண்ணி எண்ணிக் கண்ணீர் வடித்தான். இனி, அவள் இல்லாத இடம் வெறும் சூன்யம்! எகிப்தின் உயிரே போய் விட்டது என்று கூவினான். போர்வாளைக் கையில் எடுத்தான். விண்ணோக்கி எறிந்தான். வீர மார்பை உயர்த்தி நின்றான். வாள் பாய்ந்தது நெஞ்சில். வெற்றித் திருமகன் எகிப்து மண்ணில் சாய்ந்தான்!

விபரீத விளையாட்டின் விளைவு கண்டு எகிப்து நாட்டு அரசி விம்மினாள். விழி நீர் சோர நின்றாள்.

"ஜூனோ! நீ சொன்னதுதான் சரி!" என்று அவளைக் கட்டிப் பிடித்துக்கொண்டு அழுதாள். அதற்குள் தீயென மற்றோர் சேதி வந்தது, அகஸ்டஸ் சீசர் அரண்மனை நோக்கி வருகிறான் என்று! அழகி அங்குமிங்கும் ஓடினாள். வீராதி வீரர்களை மடிமீது கிடத்தி அடிமைப் படுத்திய ராஜ குடும்பத்து மாதரசி, நிற்க இடமின்றி அலைந்தாள். அகஸ்டசின் கையிலே சிக்கினால் ரோம் நாட்டு வீதிகளில் விலங்கிட்டு இழுத்துச் செல்வானே யென்று கதறினாள்.

எஜமானியின் அங்கலாய்ப்பு கண்டு, ஜூனோ அகஸ்டசை சந்திக்க ஓடினாள். அவள் ஏன் அகஸ்டசை சந்திக்க வேண்டும்? அவள் அவனிடம் கிளியோபாட்ராவுக்காக வாதாடப் போகிறாளா?

எதிரே ஏறு நடை போட்டு வரும் அகஸ்டசை ஜூனோ பார்த்தாள். "எங்கள் ராணியை இழிவு படுத்தாதீர்கள்!" என்று கண்ணீர் கொட்டியவாறு அவனிடம் மண்டியிட்டுக் கெஞ்சினாள்.

"அவளை கௌரவமாக நடத்துகிறேன். வா, உன் ராணி இருப்பிடத்தைக் காட்டு!" என்று அவளோடு அந்தப்புரம் நோக்கி நடந்தான் அகஸ்டஸ்.

அந்தப்புரத்திலே அதற்குள் அழகி கிளியோ, தனக்கேற்ற முடிவைத் தேடிக் கொண்டாள். அந்தணியின்றி அவளால் வாழ முடியாது. அகஸ்டசோ தன்னை மரியாதையாக நடத்த மாட்டான் என்று பயந்தாள், இதற்கு மேல் வாழ்ந்து என்ன பயன்? உலகில் அனுபவிக்க வேண்டிய சுகங்களையெல்லாம் அனுபவித்து நான்கு குழந்தைகளுக்கும் தாயாகிவிட்ட —இளமை குறையாத எழிலரசி இனி வாழ்வது கூடாது என்ற தீர்மானத்தை நிறைவேற்றினாள். சீசரும் அந்தணியும் ஆசை தீர முத்தமிட்ட அவள் இதழ்களில் சீறும் நாகத்தைக் கொண்டு முத்தமிடச் செய்தாள். எகிப்துப் பாவையின் உயிரைப் பாம்பு குடித்தது! அழகு பிணமாயிற்று! தங்

[தொடர்ச்சி பக்கம்—12]

37. மார்ட்டின் லூத்தர்

அன்புள்ள மாதவி,

ஐரோப்பிய 'மறுமலர்ச்சியில் பூத்த புரட்சி மலர் லூத்தர்! மதத் துறையில் மட்டுமல்ல, அரசியல் துறையிலும் அவருடைய கோட்பாடுகள் ஐரோப்பாவில் பெரிய மாற்றத்தையே உண்டாக்கியது. கத்தோலிக்க மத குருவாக வாழ்க்கையைத் துவங்கிய அவர், போப்பாண்டவரின் தாக்கீதுகளை எதிர்த்துப் புரட்சிக் கொடியை உயர்த்தினுர். 'மறுப்பு மதம்' ஒன்று உருவாயிற்று!

16--ம் நூற்றுண்டின் ஆரம்பக் காலத்தில் கிறித்துவ மதத்தில் ஊழல்கள் மலிந்திருந்தன. மகேசனின் அவதாரமே தாங்கள் என எண்ணிய மதகுருமார்கள் மனம் போனபடி வாழ்ந்தனர். அக்காலத்தில் இருந்த ஊழல்களில் மிகவும் மோசமானது பாப மன்னிப்புச் சீட்டு விற்பனையாகும். பாபம் செய்தவர்கள் பணம் கொடுத்து பாபமன்னிப்புச் சீட்டைப் பெற்றுத் தங்கள் பாபங்களைக் கழுவிக் கொண்டனர். மக்களின் பாபங்களை சரக்காக வைத்து, மதகுருமார்கள் வியாபாரத்தில் ஈடுபட்டனர். பொன்னையும் பொருளையும், போக வாழ்வையும் துறக்க வேண்டியவர்கள், அவற்றைப் பூரணமாக அனுபவிக்க மக்களின் அறியாமையைப் பயன்படுத்திக் கொண்டனர். மதகுருவாகவும், ஜெர்மனியிலுள்ள விட்டன்பர்க் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகவும் விளங்கிய லூத்தர் பாபமன்னிப்புச் சீட்டு விற்பனையைக் கண்டு வேதனையடைந்தார். புதுமை மனப்போக்கும் புரட்சி உள்ளமும் கொண்ட லூத்தர், 95 தத்துவங்கள் அடங்கிய மறுப்பு ஒன்று தயார் செய்தார். அதன் பிரதியை விட்டன்பர்க் தேவாலயக் கதவின்மீது ஆணி அடித்துப் பொருத்தினுர். அன்று அவர் அடித்த ஆணி கிறித்துவ மதத்தை இருகூருக்கியது; அதன் விளைவாக ஐரோப்பிய நாடுகள் இரண்டு பாசறைகளில் அணிவகுத்து நிற்கும் நிலையைப் பெற்றன.

லூத்தரின் பேச்சும் எழுத்தும் ஐரோப்பாவில் பெரும் புயலொன்றை உருவாக்கியது!

லூத்தர் சிறந்த பேச்சாளர். பெரிய கல்விமான். இருந்தபோதிலும் பெருமக்கள் உள்ள சபையில் பேசுவதற்குக் கூச்சப்படும் சுபாவம் உள்ளவர். சட்டம் பயின்று கொண்டிருந்த அவர் மதத் துறையில் ஆர்வம் கொண்டு, மதபோதகரானுர். ஆத்ம விடுதலையை நாடி இளமையிலிருந்தே அவர் உள்ளம் தவித்துக் கொண்டிருந்தது. மதபோதகரான அவர் மத அனுஷ்டானங்களில் அதிக அக்கறை காட்டினுர். உடலை வருத்திக் கொண்டால்தான் ஆத்மா புனிதமடையும் என்ற நம்பிக்கையில், பலவகையான கஷ்டங்களுக்கும் தன்னைத் தானே ஆட்படுத்திக் கொண்டார். முடிவில், இம்மாதிரி செயல்களில் ஈடுபடுவதில் பயனில்லை என்பதை உணர்ந்தார். கி. பி. 1510-ல் போப்பாண்டவர் வாழும் கத்தோலிக்கத் தலைமைப் பீடமான ரோமுக்குச் சென்றுர். புனித போப்பாண்டவர் வாழும் இடம் பாபக்கிடங்காக இருப்பதைப் பார்த்து மனம் உடைந்தார். மக்களின் ஒழுக்க உணர்வை உயர்த்த வேண்டிய மதம் சந்தைப் பொருளாகி விட்டதைக் கண்டு சஞ்சலமடைந்தார். பாப மன்னிப்புச் சீட்டை விற்றே பல மதகுருமார்கள் ஜீவனம் செய்து வந்தனர். மதத்தின் ஆணி வேரை அழிக்கும் இந்தத் தீய பழக்கத்தை ஒழித்துக்கட்ட முடிவு செய்தார். அதன் விளைவாகவே 95 கோட்பாடுகள் அடங்கிய மறுப்பு விட்டன்பர்க் தேவாலயத்தில் தொங்கவிடப்பட்டது.

லூத்தரின் கோட்பாடுகள் பற்றி சர்ச்சை எழுந்தது. அப்பொழுது போப்பாண்டவராக இருந்த பத்தாவது லியோ விட்டன்பர்க் மதகுருமார்களிடம் ஏற்பட்ட சிறு சச்சரவு என அதை அலட்சியப்படுத்தினுர். லூத்தரின் கோட்பாடுகள் அருகாக வேர்விட்டு ஆலாகத் தழைத்தது. வளர்ந்து உருவாகும் எதிர்ப்புகண்டு லியோ பீதியடைந்தார். அறுபது நாட்களுக்குள் லூத்தர் தன்கோட்பாடுகளை மாற்றிக் கொண்டு பதிலளிக்காவிட்டால், மதப்பிரஷ்டம் செய்யப்படுவார் என போப் அறிக்கையனுப்பினுர். போப்பின் அறிக்கையைப் பகிரங்கமாகக் கொளுத்தி லூத்தர் தன் பதிலைத் தெரிவித்துக் கொண்டார்.

ஆண்டவனின் அவதாரம் அனுப்பிய கட்டளை சாதாரணக் காகிதமாகக் கருதப்பட்டு எரித்து சாம்பலாக்கப்பட்டது!

போப்பாண்டவரின் ஆணையைச் சாதாரண ஒரு மதக்குரு —கல்லூரி ஆசிரியன் — மீறிய செயல் ஐரோப்பாவையே திடுக்கிட வைத்தது!

போப்பின் தெய்வீக சக்தியால் பூகம்பம் ஏற்பட்டு பூமி பிளக்கவில்லை; எரிமலை குமுறி நெருப்புக் குழம்பைக் கக்கவில்லை; கடல் கொந்தளித்து நாட்டை அழித்து விடவில்லை! லூத்தர், லூத்தராகவே வாழ்ந்தார். மக்கள் உண்மையை உணர்ந்தனர். லூத்தரிடம் மக்களுக்கு நம்பிக்கை வளர்ந்தது.

ஜெர்மன் நாடு அப்பொழுது புனித ரோம் சாம்ராஜ்யத்தின் ஒருபகுதியாக விளங்கியது. போப்பாண்டவரின் கட்டளையின்பேரில், ஜெர்மன் மன்னன் லூத்தரை மதத்துரோகியெனப் பிரகடனப்படுத்தி மரண தண்டனை விதித்தான். மக்கள் சக்தி லூத்தரின் பக்கம் இருந்ததால் அந்த தண்டனை நிறைவேற்றப் படவில்லை. அரசர்களும் தீண்ட முடியாத மகத்தான அரசியல் சக்தியாக விளங்கினுர் மார்ட்டின் லூத்தர்! 'மறுப்பு மதம்' மன்னனும் போப்பும் அசைக்க முடியாத அஸ்திவாரத்தில் உருவாகிக் கொண்டிருந்தது!

அக்காலத்தில் கத்தோலிக்க மதத்தின் தூணாக விளங்கியவனும் ஸ்பெயின் நாட்டுச் சக்ரவர்த்தியுமான ஐந்தாம் சார்லஸ், லூத்தரைத் தன் அரசவைக்கு அழைத்தான். அவரும் போனுர். லூத்தரைத் திருத்தித் தன்வழி நடக்கச் செய்ய அவன் செய்த முயற்சிகள் வீணுயின. லூத்தர் தாயகம் திரும்பினுர், திரும்பும் வழியில் அவர் திடீரென்று மறைந்து போனுர். சார்லஸ் மன்னனுல் அவர் கொல்லப்பட்டதாக வதந்தியொன்று உலாவியது. உண்மையில் நடந்தது இதுதான்; லூத்தரிடத்தில் பெருமதிப்புக் கொண்டிருந்த அவருடைய நண்பரொருவர் சார்லஸ் மன்னனுல் அவருக்குத் தீங்கு எதுவும் ஏற்படாமலிருக்க அவரைக் கடத்திக்கொண்டு போய் தன்னுடைய கோட்டையில் பாதுகாப்பளித்து பத்திரமாக வைத்திருந்தார். ஓராண்டுவரை அவர் அங்கேயே தங்கியிருந்தார். அப்பொழுது நிறையப் படித்தார். மக்களின் தொல்லையின்றி ஓய்வாக நிறைய சிந்தித்தார். பைபலின் பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடு இரண்டையும் ஜெர்மன் மொழியில் மொழிபெயர்த்தார். சில பகுதிகளுக்கு விமர்சனமும் எழுதினுர். தனது கொள்கைகளுக்குத் திட்டவட்டமான உருவம் கொடுத்தார்.

1525-ல் கத்தோலிக்க சந்நியாசினியாக இருந்த காதரைன் வான் பெர்ரா என்ற பெண்ணை மணந்துகொண்டார். அவரும் லூத்தரின் மார்க்கத்தில் ஈடுபட்டவரே!

லூத்தரின் புதிய ஏற்பாடு ஐரோப்பாவெங்கும்செல்வாக்குப் பெற்றது. மக்களில் பலரும் மன்னர்களில் சிலரும் லூத்தரின் ஏற்பாட்டை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். கத்தோலிக்க மார்க்கம் அருகிவரும் தன் செல்வாக்கு கண்டு அஞ்சியது. திருந்தினுலொழிய வாழ வழியில்லை என்று கண்டு கொண்டது. இக்னேஷியஸ் லயோலா என்ற பெரியார் கத்தோலிக்க மார்க்கத்தைச் சீர்திருத்துவதில் ஈடுபட்டார். 'ஏசு நாதர் சங்கம்' என்ற அமைப்பினை ஏற்படுத்தி, பாதிரிகள் மக்கள் தொண்டர்களாக விளங்கவும் மாண்புமிக்க வாழ்வு வாழவும் ஏற்பாடு செய்தார். கத்தோலிக்க மதம் முழு வீழ்ச்சியிலிருந்து மீட்கப்பட்டது. 'ஏசு நாதர் சங்கம்' நம் நாட்டில் கல்வி வளர்க்கும் பணியில் ஆற்றியுள்ள தொண்டுகள்தான் நீ அறிந்ததாயிற்றே.

1483-ல் பிறந்த மார்ட்டின் லூத்தர் 63 வருடங்கள் வாழ்ந்து அறிவுப்பணி புரிந்த பின் 1546ல் காலமானுர். மார்ட்டின் லூத்தரின் எண்ணங்கள் மதத்துறையில் மட்டுமின்றி அரசியல் உலகிலும் ஐரோப்பிய மக்களை இரு பெரும் பிரிவுகளாக்கி வைத்தது. கத்தோலிக்க நாடான ஸ்பெயின் நாட்டின் ஆணையை எதிர்த்து 'மறுப்பு மத' நாடுகளாக பெல்ஜியம், ஹாலந்து புரட்சி செய்தன, அந்நாடுகளின் தலைவனுக ஆரஞ்சு வில்லியம் சுதந்திரப் பிரகடனம் செய்தான். ஸ்பெயினுக்கு எதிராக நாற்பதாண்டுப் போர் ஒன்று மூண்டது. இன்றும் ஹாலந்து நாட்டை ஆள்பவர்கள் ஆரஞ்சு வில்லியத்தின் சந்ததியே!

ஜெர்மானிய சிற்றரசர்களும் மத அடிப்படையில் இருபிரிவாக பிரிந்தனர். 1618லிருந்து 1648 வரை முப்பதாண்டுப் போர் நடந்தது. இதனுல் ஜெர்மன் நாடு வெகுவாகப் பாதிக்கப்பட்டது. இதனுல் இதர ஐரோப்பிய நாடுகளெல்லாம் தேசங்களாக உருவான போது, ஜெர்மனி உள் நாட்டுப் பிணக்குகளால் பிளவு பட்டு இருந்தது. அது தேசமாக உருப்பெற பல ஆண்டுகளாயிற்று!

மாதவி, மார்ட்டின் லூத்தரின் கோட்பாடுகளில் முரண்பாடுகள் நிறைய இருந்தன. மதத்தில் சீர்திருத்தம் விரும்பியோர் பலர். ஆனுல், லூத்தரே அதற்கு ஒரு உருவம் கொடுத்தவர். ஐரோப்பிய அரங்கிலே அவர் பீடு நடைபோட்டார், அவருடைய உறுதி கண்டு. எதிரிகளும் வியந்தனர். பகிரங்கமாக அவரை எதிர்த்தோரும் மறைவில் பாராட்டினர். ஸ்விங்லின், கால்வின் போன்ற சீர்திருத்தக்காரர்கள் அப்பொழுது வாழ்ந்தாலும், அவர்களிடையே இமயமாக உயர்ந்து நின்றவர் லூத்தர்.

உண்மையை உணர்ந்தால் மட்டும் போதாது; அதை எடுத்துச் சொல்லும் மனத்திராணியும் வேண்டும். லூத்தர் நிறைந்த அளவில் இந்த உறுதியைப் பெற்றிருந்தார். அதனுலேயே அவரால் சாதனைகள் புரிய முடிந்தது.

கால வேகத்தை எதிர்த்து நீச்சல் போட்டவர், பெரியார் லூத்தர். அவர் நமக்கெல்லாம் வழிகாட்டி!

அன்புள்ள,

அகத்தியன்.

மனசு வருமா ?

வடநாட்டுப் பணத்திமிங்கலமாம் கோயங்காவின் ஆணவப் போக்கால் 'எக்ஸ்பிரஸ்—தினமணி' பத்திரிகையில் பணிபுரிவோரின் 700 குடும்பங்கள் நடுத் தெருவில் நிற்கின்றன!

இதைத் தட்டிக் கேட்க நாதியில்லை, இந்த மாநில அரசில் !

இந்த மாநில அரசே நிறுவிய 4 தீப்பெட்டித் தொழிற் சாலைகள் மூடப்படவிருக்கின்றன். அத்தொழிலை நம்பிய குடும்பங்களின் கதி இனி என்னவோ...?

இப்படி இருக்கும்போது, கோயங்காவைத் தட்டிக் கேட்க எப்படி இந்த சர்க்காருக்கு மனசு வரும் ?

சகோதரி

ஏ. வி. எம்.—குப்பி கர்னடகா கூட்டுத் தயாரிப்பில் உருவாகி வருகின்ற திரைப் படத்திற்கு 'சகோதரி' என்று பெயர் சூட்டியிருக்கிருர்கள். மூன்று பெண்களின் மனேபாவத்தை நிலைக்களனுக வைத்துப் பின்னப்பட்டிருக்கும் இக்கதை 'நல்ல குடும்பம் பல்கலைக் கழகம்' என்ற தத்துவத்தை விளக்குகிறது. குடும்பத்தின் நலனுக்காகப் போராடும் ஒரு நல்ல பெண்மணி — இறுதியில் மரணத்தைத் தழுவுகின்ற காட்சி ஒன்று சமீபத்தில் ஏ. வி. எம். படப்பிடிப்பு நிலையத்தில் படமாக்கப்பட்டது. ஏ. பீம்சிங் டைரக்ட் செய்கின்ற இப்படத்திற்கு மாறன் திரைக்கதை வசனம் எழுதுகிருர். பாலாஜி, பிரேம்நசீர், ராஜசுலோசனு, தேவிகா, தாம்பரம் லலிதா, முத்துராமன்—ஆகியோர் நடிக்கின்ற இப்படம் விரைவில் வெள்ளித் திரைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தாய் மகளுக்குக் கட்டிய தாலி

நீண்ட காலத்திற்குப் பிறகு அறிஞர் அண்ணுவின் கதை ஒன்று திரைப்படமாக வருகிற காரணத்தால், மக்கள் மன்றத்தால் பேராதரவோடு எதிர்பார்க்கப்படுகிறது இப்படம்! மூன்ருண்டுகளுக்குப் பிறகு புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். சமூகப் படத்தில் தோன்றுகிருர் என்கிற காரணத்தால், இவ்வாண்டின் வெற்றிப் படங்களின் வரிசையில் இடம்பெறும் என்றும் கருதப்படுகிறது. 'திராவிட நாடு' துணையாசிரியர் இராம. அரங்கண்ணல் வசனம் எழுதி வெளிவருகிற முதல் படம் இது. புரட்சி நடிகருடன் ஜமுனு, எம். என். ராஜம், கே. ஏ. தங்கவேலு, கண்ணும்பா, ராஜசுலோசனு, ஓ. ஏ. கே. தேவர், எம். ஜி. சக்ரபாணி ஆகியோர் நடித்திருக்கின்றனர். 'கல்பனு கலா மந்திர்' சந்திரன் தயாரித்து டைரக்ட் செய்திருக்கும் இப்படம், ஜூன் ஒன்பதாம் தேதியன்று திராவிடமெங்கும் பவனி வருகிறது.

தலைகொடுத்தான் தம்பி

பழிவாங்கப் புறப்பட்ட தம்பி, பாசத்தால் சிக்குண்டு உடன் பிறந்தானுக்காக உயிர்கொடுத்த வரலாற்றைச் சித்தரிக்கும் கதை இது! உணர்ச்சிமிக்க நடிப்பும், இதயத்தைத் தொடுகின்ற வசன அமைப்பும் இப்படத்தின் சிறப்பு அம்சங்களாகும் — என்று மார்டன் தியேட்டர்ஸ் செய்தித் துணுக்கு ஒன்று கூறுகிறது. சில நாட்களுக்கு முன் சுரங்கக் காட்சி ஒன்றை நூற்றுக் கணக்கான நடிகர்களை வைத்துப் படமெடுத்தாராம், மார்டன் தியேட்டர்ஸ் அதிபரும், படத்தின் டைரக்டருமான டி. ஆர். சுந்தரம். தணிக்கையை முடித்துக் கொண்ட இப்படம், ஜூனில் வெளிவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி அண்ணனுகவும், இலட்சிய நடிகர் ராசேந்திரன் தம்பியாகவும் நடித்திருக்கின்றனர். மற்றும் மனேகர், குலதெய்வம் ராசகோபால், மாலினி, தாம்பரம் லலிதா, முத்துலட்சுமி ஆகியோரும் பங்கேற்றிருக்கின்றனர்.

"உதயசூரியன்" நாடகம்

9—5—59 இரவு 10 மணிக்கு அறிஞர் அண்ணு அவர்கள் தலைமையில் தோழர் மு. க. வும், மற்றும் முரசு நாடக மன்றத்தாரும் நடித்த "உதயசூரியன்" நாடகம் புள்ளம்பாடி கிராமத்தில் நடைபெற்றது. பெருந்திரளான மக்கள் நாடகத்தைக் கண்டு களித்தனர். மறுநாள் 10—5—59 இரவு பத்து மணிக்கு திருச்சி தேவர் ஹாலில் "உதயசூரியன்" நாடகம் சிறப்பாக நடைபெற்றது. தோழர் அம்பில் தருமலிங்கம் அவர்களின் நிதிக்காக நடத்தப்பட்ட இந்த நாடகங்களில் நாலாயிரத்து ஐநூறு ரூபாய் வரையில் மிச்சப்பட்டதாகக் கூறி தோழர் அம்பில் தருமலிங்கம் அனைவருக்கும் நன்றி கூறினர்.

கட்டபொம்மன்

வெள்ளையனை எதிர்த்துப்போர் முழக்கமிட்ட விடுதலைத் தலைவனும்; வீரபாண்டிய கட்டபொம்மனின் வரலாறு, நூறு நாடகங்களுக்குமேல் தமிழக மேடைகளில் காட்சியளித்துவிட்டு, இப்போது திரைப்படமாக பவனி துவங்குகிறது. நடிகர் திலகத்தின் உணர்ச்சிமிக்க நடிப்பு, பல்லாயிரக் கணக்கான துணை நடிகர்களைக் கொண்ட போர்க்கள காட்சிகள்—டெக்னிக் கலரிலே வருகின்ற முதல் தமிழ்ப் படம்—இத்தனை சிறப்புகளையும் கொண்ட இப்படத்திற்கு பல இலட்சம் ரூபாய்கள் செலவாகியிருக்கின்றனவாம். பத்மினி பிக்சர்ஸ் தயாரிக்கின்ற இப்படத்தில் தென்னகத்தின் முன்னணி நடிகர்கள் பலர் நடித்திருக்கின்றனர். சிவாஜி கணேசனுடன், ஜெமினி கணேசன், ஓ. ஏ. கே. தேவர், பத்மினி, ராகினி, எஸ் வரலட்சுமி ஆகியோர் நடித்திருக்கின்றனர்.

காஞ்சித் தலைவன்

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். தயாரித்து வருகின்ற சரித்திர நாடகம் இது. அவரது முதல் சரித்திர நாடகமான காரணத்தால், பிர்ம்மாண்டமான காட்சி ஜோடனைகளுடனும், வியக்கத்தக்க புதிய அமைப்புகளுடனும் தயாராகிக் கொண்டிருக்கிறது! பல்லவப் பேரரசின் காலத்தில் நிகழ்ந்த போர்களை நிலைக்களனுக வைத்து இந்த வீரந்துள்ளும் வரலாற்றுக் காவியத்தை உருவாக்கியிருக்கிருர், ஆசிரியர் மு. கருணுநிதி. பாடல்களை கவிஞர் கண்ணதாசன் இயற்றுகிருர். புரட்சி நடிகருடன் அவரது நாடக மன்றத்தினர் அனைவரும் நடிக்கின்ற இந்த நாடகம் விரைவில் தமிழக மேடைகளில் தோன்றும். அதோடு, விரைவில் இந்தக் கதையைத் திரைப்படமாக்கவும் போகிருர்கள்.

★ ★ ★

கலப்படம்

கடமைப் பணிகள் !

கனம் காமராசர் டெல்லிக்குச் சென்றார்!

ஏன்? எதற்காக?

ஊட்டியிலே — குளிர்ச்சியின் அணைப்பிலே—எதிர்ப்பின் குரல் ஒலிக்காத இடத்திலே — சூரியனின் வெப்பத்தைத் தணித்துக் கொண்ட அவர், கொடிய வெய்யிலின் இருப்பிடத்திற்கு ஏன் சென்றார்?

வெளியூர்களுக்குச் சுற்றுப் பயணம் போய்க் கொண்டிருப்பதே மந்திரிகளுடைய 'தொழில்' என்றாலும், இந்த நேரத்தில் மக்கள் மன்றத்தின் வாய் இந்தக் கேள்வியைக் கேட்கத்தான் செய்கிறது; கண்களும் அமைச்சர்களை வளையமிட்ட வண்ணமே இருக்கின்றன!

இதற்குக் காரணம் மிகச் சாதாரணமானது — மகத்தான பாராட்டைப் பெறுகின்ற ஒருவனும் கவனிக்கப்படுகிறான்; பரிதாபத்திற்குரிய கேவல நிலையை அடைந்துவிட்ட ஒருவனும் பிரச்னைக்குரிய உருவமாகி விடுகிறான். இந்தப் பொது வாழ்வுத் தத்துவத்தின் அடிப்படையில்தான் காமராசர் ஏன் டெல்லிக்குப் போகவேண்டும்—என்ற கேள்வியும் எழும்புகிறது; வேறொன்றுமில்லை!

ஆகவேதான், அதற்கான காரணம் என்னவென்று நாமும் ஆராய்வோம் இங்கே:

● சென்னை நகர மக்கள் எதையும் „சீர்தூக்கிப் பார்க்கும் பேராற்றலைப் பெற்றுவிட்டார்கள். ஆகவே அந்த மண்ணில் காலடி வைத்தாலே குப்புற விழுந்து விடுவோம்; குழி பறிக்க 'நம்மவர்'களே காத்திருக்கிறார்கள் என்ற பயம் காரணமா?

இருக்க முடியாது நிச்சயம்!

● பிறகு...அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் கலந்து கொண்டாரே, அங்கே இந்திரா காந்தியாரின் முன்னிலையில் தென்னகத்திற்கு இழைக்கப்பட்டுவரும் வஞ்சகத்தை எதிர்த்துப் போர்க் குரல் எழுப்பவா?

இல்லை; இல்லை! அவர் பெண் என்றாலும்கூட இவருக்குத் துணிவு பிறக்காது!

● இந்தியா, ஆங்கிலமா—இந்த வினாவிற்கான விடை அடுத்து கூடஇருக்கின்ற பாராளுமன்றத்தின் கைக்குள் இருக்கிறதாமே; ஆகவே தமிழைக் காக்க—தரம்கெட்ட இந்தியை வீழ்த்த ஆங்கிலத்திற்கு ஓட்டளிப்பீர் — என்று தமிழக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வேண்டுகோள் விடுக்கவா?

இல்லை; இல்லை! அதற்குத் தேவையான 'தமிழ் மானம்' அவரிடம் கடுகளவுகூடக் கிடைக்காதே!

● அப்படியானால் பண்டித நேருவைத்தான் சந்திக்கச் சென்றிருப்பார்! உலகத்தின் கூரையிலேயிருந்து உருட்டப்படுகிறவர்களுக்கெல்லாம் அடைக்கலம் அளிக்கிறீர்களே! திபேத்திலிருந்து வருகின்ற ஆயிரக் கணக்கான அகதிகளை விட இலங்கையிலிருந்து வருகின்ற தமிழர்கள் எந்த அளவுக்குத் தாழ்வானவர் என்று கருதுகிறீர்கள்? இது நீதியல்ல; நேர்மையல்ல! சீனு சிறினலும் என் சீரிய பணியைச் செய்தே தீருவேன்—என்று மார்தட்டும் மனிதகுல மாணிக்கமே! தமிழினத்தின் சோகக் குரலுக்குச் செவி சாய்த்திடுவீர் — என்று கோரிக்கை எழுப்பவா?

இல்லை; இல்லை! அது இருதயமுள்ளவர்களின் செயலல்லவா?

● அல்லது, தமிழகம் முழுதும் எதிர்த்து நிற்கிறது, கனம் கேஸ்கரே! தயவு செய்வீர்! 'ஆகாஷ்வாணி'யை அப்புறப்படுத்தி, வானொலியை மட்டும் ஒலிக்கச் செய்வீர், எங்கள் பகுதியிலே இருக்கும் வானொலிப் பெட்டிகள் அனைத்தும் உடைக்கப்படும் முன்பாக— என்று கெஞ்சவா?

இல்லை, இல்லை!

● கெஞ்சுவதற்கு இல்லை என்றால் தட்டிக் கேட்கவா?

அந்தோ....அதற்கும் இல்லை தான் பதில்! இத்தனையும் மக்கள் குரலுக்கு மதிப்பளித்துத் தீர வேண்டிய மந்திரியாரின் தலையாய கடமைகளாயிற்றே!

காமராசர் செய்வாரா?

அவர் செய்ததெல்லாம் புது டெல்லி வாழ் தமிழர்களின் நலனுக்காக ஒரு 'புனிதமா'ன காரியத்தைத்தான்!

'என்ன; என்ன' என்று கேட்கத் துடிக்கும் ஏ, தமிழ்ப் பெருங்குடி மக்களின் தவிக்கும் நெஞ்சங்களே! கொஞ்சம் பொறுங்கள்...

நமது காமராசர் இரு கடமைப் பணிகளைப் புரிந்தார் !

ஆமாம்; விநாயகர் கோவில் ஒன்றின் வேலையை ஆரம்பித்து வைக்க ஓடினார்; ஆரம்பித்து வைத்தார், மேளதாளத்திற்கிடையே-வேத ஒலிகளுக்கிடையே —செங்கோட்டை இருக்கின்ற டெல்லி மாநகரிலே!

காமராசர் இந்தமுறை டெல்லியிலே சாதித்தது இதுதான் என்றில்லை. இன்னொரு அரிய காரியத்தைச் செய்திருக்கிறார். அந்த ஆலயத்திற்கும்—அந்தப் பிள்ளையாருக்கும் வருங் காலத்தில் நிழல் தருவதற்காக அரசங்கன்று ஒன்றை நட்டார்; ஆயாசத்தோடு திரும்பி விட்டார்!

இந்திய ஒற்றுமை...

[11-ம் பக்கத் தொடர்ச்சி]

தாகவே இருக்கும் என நாம் கூறுகின்றோம்.

இந்தியத் துணைக்கண்டத்திலிருந்து ஆங்கிலேய ஏகாதிபத்தியம் வெளியேற நற்பணி ஆற்றியவரும், அச்சமயத்தில் பிரிட்டனின் பிரதமருமான அட்லி, 'நியூஸ் கிரானிக்கிள்' பத்திரிகைக்குப் பேட்டி அளிக்கையில், இப்படிக் குறிப்பிடுகிறார்:

"மொழி வேற்றுமையாலும், மொழிச் சர்ச்சையாலும் இந்தியா துண்டாடப்படக் கூடும்."

அட்லியின் அபாய அறிவிப்பு அகில இந்தியவாதிகளுக்கு அதிர்ச்சியை, திகிலைத் தந்திருக்கலாம். ஆனால், இந்தியத் துணைக்கண்டத்து பல்வேறு நிலைமைகளை நன்குணர்ந்தவர்கள் ஆட்லி உணர்ந்திருக்கும் உண்மையை இந்திய அரசியல் கட்சியினர் அறிந்தபாடில்லையே என்றுதான் வருந்துவர்.

இந்திய ஒற்றுமை அபாய நிலையிலிருக்கிறது என்று அட்லி அறிவிக்கிறார். ஆனால் இங்குள்ள காங்கிரஸ்காரர்கள் இந்திய ஒற்றுமை குலையாது எனக்கூறி திராவிடநாட்டு இலட்சியத்தைப் பகற்கனவு எனப் பரிகசிக்கின்றனர்.

பாக்கிஸ்தான் அமைவதற்கு, முன்னாலேகூட அத் திட்டத்தை பகற்கனவு என்றுதான் காங்கிரஸ்காரர்கள் கருதினர். அவர்களென்ன, பாக்கிஸ்தான் தந்தை எனப் பாராட்டப்படும் ஜின்னா கூட பாக்கிஸ்தானைக் கற்பனையாய், பகற்கனவாய்தான் அவருடைய பொது வாழ்வின் துவக்கக் காலத்தில் நம்பியிருந்தார்.

1925—ம் ஆண்டு வாக்கில் லண்டனிலுள்ள கிரசெண்ட் ஓட்டலில் ஜின்னாவைச்சுற்றி மாணவர்கள் அமர்ந்திருக்கின்றனர். இன்னொரு பக்கத்தில் கவிஞர் அல்லாமா இக்பால் பேசிக்கொண்டிருக்கிறார். மாணவர்கள் என்றால் ஜின்னாவுக்கு உயிர். ஜின்னாவிடம் மாணவர்கள் நெருங்கி உரையாடிக் கொண்டிருக்கின்றனர்

மாணவர்கள் ஜின்னாவிடம் "பாக்கிஸ்தான் குறித்து இக்பால் பாடுகின்றாரே; அதுபற்றித் தங்கள் கருத்து யாது?" என வினவுகின்றனர்.

"இக்பால் யார்?" என மறு கேள்வி தொடுத்தார் ஜின்னா,

மாணவர்களின் சிந்தனைத் திரையிலே இக்பால் இயற்றிய வண்ணக் கவிதைகள் தோன்றின. அழகொளிரும் பெண்களின் கண்கள் வானத்துத் தாரகைகளாய் கவிதை சொல்லிற்று. நங்கையரின் சிரித்தமுகமாய் முழுமை நிலா தோன்றும். இப்படி இயற்கைப் பொருளனைத்தையும் கற்பனையால் கண்டு அழகு மணம் பரப்ப கவிதை புனையும் கவிக்குயிலாய் இக்பால் மாணவர்களுக்குத் தெரிந்தார். ஆகவே, "இக்பால் சிறந்த கவிஞர்!" என்று மாணவர்கள் பதில் சொன்னார்கள்.

"அவர் கவிஞர்தான்! அதனால் தான் பாக்கிஸ்தான் என்ற கற்பனை செய்கின்றார்!" என்று ஜின்னா பதிலிறுத்தார். லண்டனிலே அன்று ஜின்னா பாக்கிஸ்தானைக் கற்பனை என்று விளக்கினார். பின்னர் அவரே பாக்கிஸ்தானின் சிற்பியாய் மாறி வெற்றி கண்டார்.

இன்று காங்கிரஸ்காரர்களும், ஏனையஅகில இந்திய வாதிகளும் இந்தியஒற்றுமையை நிலையெனக் கொண்டு, திராவிட நாடு திராவிடருக்கே என்ற இலட்சியத்தைப் பகற் கனவு என்று அலட்சியமாய் சொல்கின்றனர். காலம் பழுத்து வருகின்றது. பழைய ஜின்னாக்கள் புது ஜின்னாக்களாக மாறுவார்கள் என்பது மட்டும் நிச்சயம்!

ஓடிவந்த தலைவன்...

[5-ம் பக்சுத் தொடர்ச்சி]

ஒரு தேர்வு நடந்தது. முந்தைய தலாய்லாமா உபயோகித்த கைத்தடி முதலிய பொருட்களை, அதே போன்ற பொருட்களிடமிருந்து கண்டெடுப்பதில் நடந்த அத் தேர்வில் சீன எல்லையிலிருந்து வந்த பையன் நல்ல முறையில் தேர்ந்தானும். பிறகு அவனுக்கு லாசாவில் மதபோதம் நடைபெற்றது!

இந்தத் தலாய்லாமாவிற்கு அதிகமாக ஆளும்பொறுப்பில்லை. ராஜப் பிரதிநிதிகளே எல்லாம் கவனித்துக் கொள்கிறார்கள். இருந்தும் அவர்களுள் சண்டை மூண்டு தலாய்லாமாவையும், பஞ்சன்லாமாவையும் கைப்பாவைகளாக்கிக்கொண்டு அரசியல் போட்டி நடத்துவார்கள்.

சீனர்களின் தலையீட்டால் தலாய்லாமா ஓடி வருவது இதுதான் முதற்தடவையில்லை. 1950—ல் இம்மாதிரி சிக்கிம் வரை இவரே ஓடிவந்திருக்கிறார். பின்னர் சீனர் அளித்த வாக்குறுதியின்பேரில் திரும்பிச் சென்றார். தலாய்லாமா திபெத் தனியுரிமை பெற்ற நாடாக இருக்க வேண்டும் என நினைப்பவர். பஞ்சன்லாமா சீனாவின் காலனி நாடாக திபெத் மாறவேண்டும் என நினைப்பவர்.

இத்தகைய அரசியற் போட்டி காரணமாக பண்டைக் காலத்திலிருந்தே தலாய்லாமாக்களின் உயிர் இளவயதிலேயே பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒன்பதாவது வாரிசாக அமர்ந்த தலாய்லாமாவின் உயிர் பதினோராவது வயதில் பிரிக்கப்பட்டிருக்கிறது; பத்தாவது வாரிசு 23-வது வயதில் இறந்திருக்கிறார்; பதினொன்றும் வாரிசு 17-வது வயதில் சாவுப் பயணம் நடத்தியிருக்கிறார்; பன்னிரண்டாம் தலாய்லாமா 20 வது வயதில் மரணவாசலுக்குள் புகுந்து விட்டார்.

ஆனால், 23 வயதான பதினான்காம் தலாய்லாமாவாம் இந்த 'நடமாடும் புத்தர்' காடு—மலை—வனம்—வனாந்திரம் கடந்து தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடோடி வந்திருக்கிறார், இந்தியத் துணைக்கண்டத்திற்கு!

மூடப்பழக்க வழக்கங்கள் எனும் சகதிச் சேற்றிலே கால் ஊன்றி நின்றாலும், தானும், தான் வாழுகின்ற பொன்னாடும் தனியரசு பெற்ற நாடாய் வாழ வேண்டும் என்ற தணியாத ஆசையைத் தேக்கி வைத்திருக்கும் தலாய்லாமாவும், இவரை ஆதரித்து சீனத்துப் பீரங்கிகளை எதிர்த்துப் போரிடும் திபெத்திய மக்களும் உலகெங்குமுள்ள விடுதலை விரும்பிகளின் ஆதரவை இன்றையதினம் பெறத் தகுதியுள்ளவர்களாய் விளங்குகிறார்கள்.

இந்திய ஒற்றுமை வெறும் கானல்நீர் காந்திய சீடர்களே; கண்விழிப்பீர்!

சி. ஜம்பு

இந்தியா ஒரு நாடல்ல; பல்வேறு நாடுகள் கொண்ட ஒரு துணைக்கண்டம் என்ற வரலாற்று அடிப்படையில் திராவிட முன்னேற்றக் கழகம் திராவிட நாட்டு விடுதலைக் கொள்கையை தன் இதய மூச்சாகக் கொண்டு நாடு நகரம், பட்டி தொட்டிகளிலெல்லாம் பிரச்சாரம் செய்து வருகின்றது. இந்தியா ஒரு தேசிய நாடு என்ற தவறான கொள்கையையுடைய அகில இந்தியவாதிகள் அரசியல் ரீதியில் பிரிக்க முடியாத ஒற்றுமை நிலையை, ஐக்கியத்தை இந்தியா எய்திவிட்டது என்று மனப்பால் குடிக்கின்றனர். இந்திய அரசியல் சட்டம் 1950 ஜனவரி 26-ம் நாள் பிரகடனப்படுத்தப் பட்டதிலிருந்து இந்தியா சிதறிவிடும் என்று பேசுவது வெறுங் கனவு என விளக்குகின்றனர்.

இந்தியாவை ஓரளவு புரிந்தவர்கள்கூட நீண்ட நாட்கள் ஒற்றுமையுடன் இந்தியா நிலைத்து நிற்காது எனக் கருதுகின்றனர். பல்வேறு மொழிக் குழப்பங்கள், முரண்பட்ட கலாச்சாரங்கள், பூகோள வேற்றுமைகள், பூசல் நிறைந்த பல தேசிய இனங்கள், வரலாற்றுப் பேதங்கள் இந்தியாவை ஒரே நாடாக நீண்ட நாட்துள் நிச்சயம் விட்டு வைக்கா.

இந்தியா என்ற அரசியல் அமைப்பே விசித்திரமான உருவமாகும். "இலங்கை இந்தியாவோடு இணைந்திருந்த காலத்திலும் இந்தியாவுக்கு 'இந்திய' என்ற பெயர்தான். 1935-ல் இந்தியாவிலிருந்து பர்மா பிரிந்த பின்னரும் 'இந்தியா' தன் பெயரை இழக்கவில்லை. 1947-ல் பாக்கிஸ்தான் புதிதாக அமைந்த பின்னரும் பெரும் நிலப்பரப்பை இழந்ததே தவிர இந்தியா தன்னுடைய பெயரை விட்டுவிடவில்லை.

பாக்கிஸ்தான் பத்திரிகைகள் இந்தியாவை 'பாரத்' என்றும், இந்தியாவில் உள்ளவர்களை 'பாரதியர்கள்' என்றும் கட்டுப்பாடாய் எழுதி வருகின்றன. இந்தப் போக்கு இந்தியர்களின் இதயத்தை உறுத்துவதாக 'கரண்ட்' இதழ் ஆசிரியர் டி. எப். காரக்கா பாக்கிஸ்தானின் பிரசிடெண்ட் ஜெனரல் அயூப்கானிடம் முறையிட்டு இந்தியா — இந்தியர்கள் என பாக்கிஸ்தான் பத்திரிகைகள் குறிப்பிட்டு எழுதவேண்டும் என்று வேண்டியுள்ளார். இப்படி இந்தியா என்பது ஒருவித தெய்வீக அம்சம் பொருந்தியதாக எண்ணப்பட்டு, எவ்வளவு பெரிய அரசியல் மாறுதல்கள் நிகழ்ந்தாலும் பெயரை விடாமல் பாதுகாத்து வருகின்றனர். ஆனால், இந்தியா என்பதை காலத்திற்கேற்றபடி சுருங்கிக் கொண்டே வருகின்ற பூகோளப் பெயராக கருதலாமே தவிர ஒரு தேசிய நாட்டின் பெயராக எண்ண இடமில்லை.

இந்தியா ஒற்றுமையுடன் இருக்க இயலாது என்பதை நாம் மட்டில் இயம்பி வரவில்லை. இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கிய பேரறிஞர் டாக்டர் அம்பேத்கார் அவர்களே இந்திய ஒற்றுமையை சந்தேகித்துள்ளார். அம்பேத்கார் அரசியல் சட்டத்தை இயற்றிவரும் காலம். அப்போது, அரசியல் சாணக்கியர் என்று வருணிக்கப்படும் இராசகோபாலாச்சாரியார் இந்தியாவின் கவர்னர் ஜெனரலாவார். அரசியல் சட்டம் அமைப்பது குறித்து கலந்து உரையாடி ஆலோசனை பெற சட்ட அமைச்சர் அம்பேத்கார் கவர்னர் ஜெனரல் இராசகோபாலாச்சாரியாரை சந்திப்பது வழக்கம். அப்படிப்பட்ட சந்திப்பு ஒன்றின்போது, இந்தியா பூராவிற்கும் ஒரே அரசியல் சட்டம் அமைப்பது தவறு என இராசகோபாலாச்சாரியார் அம்பேத்காருக்குச் சுட்டிக் காட்டியுள்ளார்,

தென்னாடு ஒரு கூட்டாட்சியாக மலர வேண்டும். வடநாடு இன்னொரு கூட்டாட்சியாக உருவாக வேண்டும். இவ்விரண்டு கூட்டாட்சிகளும் பொதுக் கூட்டாட்சியாக (Confederation) இணைய வேண்டும்.

—இவ்வாறு இராசகோபாலாச்சாரியார் இந்திய அரசியல் சட்டம் உருவாக்கிய அம்பேத்காருக்கு யோசனையாக தன்னுடைய கருத்தை வெளியிட்டுள்ளார் எனவே, இந்தியாவின் பழம் பெரும் அரசியல்வாதியான இராசகோபாலாச்சாரியார் இந்தியா ஒரே அரசியல் அமைப்பாக விளங்குதல் இயலாது என்பதைத் தெளிவாக அறிந்து கொண்டு, விட்ட குறை தொட்ட குறைக்கு வடநாடும் தென்னாடும் தனித் தனிக் கூட்டாட்சிகளாக உருவாகி, பொதுக் கூட்டாட்சியாக இணையட்டும் என்று கருதியிருக்கிறார்.

இதைப் பற்றி, 'மொழிவழி ராஜ்யங்கள் குறித்து என்னுடைய சிந்தனைகள்' எனும் நூலில் டாக்டர் அம்பேத்கார் குறிப்பிட்டுவிட்டு, எந்தக் காங்கிரஸ்காரரின் இதயத்தினுள்ளும் இந்திய ஒற்றுமை குறித்து உண்மையான நம்பிக்கையில்லை என்றும் வரையறுத்து எழுதியுள்ளார்.

அத்துடன், தென்னாடும் வடநாடும் மேலும் மேலும் வேற்றுமையுற்றுப் பிளவுபட பல்வேறு காரணங்களை காலம் உருவாக்கும் என்றும் அம்பேத்கார் முன்னறிவிப்பு செய்துள்ளார். இந்தித் திணிப்பு, சாகா காலண்டர், ஐந்தாண்டுத் திட்டங்களில் புறக்கணிப்பு, அயல் நாடுகளில் வதியும் திராவிடர்களின் நிலைகுறித்து நாட்டம் செலுத்தாமை — இன்ன பிறவெல்லாம் தென்னாடு பிரிந்தேக காலம் தரும் சாதகங்களாகும்.

டாக்டர் அம்பேத்கார் மட்டுமல்ல; இக்காலக் குறிகள் குறித்து மிகச் சிறந்த அரசியல் சட்ட நிபுணர் சர். அய்வர் ஜென்னிங்ஸ் கூட குறிப்பிட்டுள்ளார். 'சுயாட்சிக்கு வழி' எனும் நூலில் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் சான்றுகள் என்று பத்து ஆண்டுகளுக்கு முன் வருணித்த அதே நடவடிக்கைகளை இன்றைக்கு இந்திய சர்க்கார் ராஜ்ய அரசாங்கங்களை மீறி மேற்கொண்டுள்ளனர் என்று ஜென்னிங்ஸ் இடித்துக் கூறியுள்ளார்.

இப்போதைய சர்க்காரை ஆங்கில ஏகாதிபத்திய சர்க்காரின் நிலைக்கு அய்வர் ஜென்னிங்ஸ் ஒப்பிட்டுப் பேசுகின்றார் — எனவே, இந்தியாவில் ஆங்கிலேயர்கள் செலுத்தி வந்த அரசியல் ஆதிக்கங்களை இன்றைக்கு டில்லியிலே உள்ள மத்திய சர்க்கார் பண்டித நேரு தலைமையிலே புரிந்து வருகின்றது — ஆக, ஆங்கிலேய ஏகாதிபத்தியத்துக்கும், பண்டித நேருவின் ஆட்சிக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை.

இந்தியாவின் ஒரு இராஜ்யத்தில் மிக்கப் பாராட்டுதலுடன் பவனி வந்த முதலமைச்சரை, திடீரென ஒருநாள் எவ்வித நீதிமன்ற விசாரணையுமின்றி சிறைக் கூடத்தில் தள்ளிவிட்டு, வேறொருவரை முதன் மந்திரியாகக் கொண்டு வருவதற்கு என்ன பெயர்? விடுதலை கோரி, உயிரைத் துச்சமெனக்கருதிப் போராடுவோரை இராணுவ வீரர்களைக் கொண்டு வெறி நாய்களைப் போல சுட்டுப் பொசுக்குவதற்கு என்ன பெயர்? இராஜ்ய சட்ட மன்றங்கள் தேவையில்லை என வற்புறுத்தியும் இந்தியைத் திணிக்கும் செயலை என்னவென்று கூறுவது?

இவைகளெல்லாம் வேறு நாடுகளில் நிகழ்ந்தால் ஏகாதிபத்திய வெறிச் செயல்கள் எனக்கூறுவார் பண்டித நேரு. ஆனால், அவர் தலைமையில் நடைபெறும் இந்திய ஆட்சியிலன்றோ இந்த அலங்கோலங்கள் அன்றாடம் நிகழ்கின்றன. உலக ஜனநாயகப் போராளி இருண்டு கிடக்கின்றது. அய்வர் ஜென்னிங்ஸ் குறிப்பாக உணர்த்துகின்றார். ஏகாதிபத்திய ஆட்சிக்கு ஒப்பிட்டு விட்டு வாளாயிருந்து விடுகின்றார்.

இந்தியாவின் நிலைமைகள் குறித்து மேலும் விளக்குகையில், மொழி உணர்ச்சிகளைமீறி இந்திய ஒற்றுமை மேலோங்கப் பரிசோதனை நடைபெறுவதுதான் இந்திய ஆட்சி என அய்வர் ஜென்னிங்ஸ் எழுதுகின்றார். ஆம்! இந்திய ஒற்றுமை பரிசோதனைக் கட்டத்தில் ஆபத்தான நிலையில் இருக்கின்றதேயொழிய முடிவான நிலைத்த உண்மையாக இன்னும் வளரவில்லை.

இந்தியாவில் எங்கு நோக்கினும் ஒற்றுமைக்கான அறிகுறிகள் தென்படவில்லை. இந்திய ஒற்றுமை வெடித்துச் சிதறும் நிலைமைகளையே கண்டு வருகின்றோம். இந்நிலையை இந்திய ஒற்றுமைக்கான பரிசோதனை என அய்வர் ஜென்னிங்ஸ் வருணிக்கின்றார். பரிசோதனையின் முடிவு திராவிடநாடு அமைவ

[தொடர்ச்சி பக்கம்—10]

நெல்லை மாவட்ட.

தி. மு. க. 3-வது மாநாடு

தென்காசியில்

(கீழப்புலியூர் புகைவண்டி நிலையத்திற்கு வடபுறம்)

மே 16, 17-ம் (சனி, ஞாயிறு) நாட்களில்

கே. வி. கே. சாமி பந்தல்—தாளமுத்து அரங்கில் நடைபெறும்.

தலைவர்: என். வி. நடராசன்

திறப்பாளர்: கண்ணதாசன்

அறிஞர் அண்ணா,

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

கழக முன்னணிச் சொற்பொழிவாளர்கள், கழகக் கலைஞர்கள் கலந்து கொள்ளுகின்றனர்.

16—5—59 இரவு 10 மணிக்கு

மு. கருணாநிதி

எழுதி, நடிக்கும், முரசு நாடக மன்றத்தாரின்

"உதயசூரியன்"

நாடகம்

17—5—59 இரவு 10 மணிக்கு

இசைமுரசு

நாகூர் அனிபா குழுவினரின் இன்னிசை நடைபெறும்.

இருநாட்களுக்கும் நுழைவு கட்டணம்:

ரூ. 5, 3, 2. பெண்களுக்கு ரூ. 1.

பதிவு எண்: 7079 முரசு: 6— ஒலி: 3 6 புதிய காசு

சுழல் விளக்கு

மாலுமி

'ஒரு சென்னைவாசி'

(?) 'எழுத்தாணி' ஏன் 'சுழல் விளக்காக' மாறிவிட்டது?

இந்தக் காலத்தில்தான் வைத்த பொருள் வைத்த இடத்தில் இருப்பதில்லையே! 'ஆயிரம் விளக்கு'கள் இருந்தும் 'எழுத்தாணி' எப்படியோ எடுத்துச் செல்லப்பட்டுவிட்டது 'மைலாப்பூரு'க்கு!

சாமிவேலன்; விருதுநகர்.

(?) காமராஜர் பெரிய சொற்பொழிவாளராக இருந்திருந்தால்.......?

கனம் நிதி அமைச்சரின் இரவல் குரல் தேவையில்லாதிருந்திருக்கும்; அதேசமயம் ஆச்சாரியாரைப்போல் 'அரசியல் விதவை'யாகவும் ஆக்கப்பட்டிருக்கலாம்!

ஆதி. பத்மனாபன்; மைலாப்பூர்.

(?) அரசியல் உலகில் "பச்சோந்தி'களுக்கே நல்ல காலம் இருப்பது ஏன்?

மன்னிக்க வேண்டும் தோழரே; தயவுசெய்து உலக சரித்திரத்தைப் புரட்டிப் பாருங்கள். அரசியலில் எங்குமே—எப்போதுமே பச்சோந்திகளுக்கு நல்ல காலம் இருந்ததில்லை! நிறத்தைக்கண்டு ஏமாறுகிற மக்கள் இருக்கிற வரையில் அவர்களுக்கு மகோன்னத வாழ்க்கை —அப்புறம் மழைக்காலத்துக் காளான்கள்போல் மறைந்து விடுகிறார்கள்!

கருணாகரன்; சேலியமேடு.

(?) 'தமிழ் நாட்டில் மிகச் சுலபமாகக் கிடைப்பவை எவை?

கள்ளச் சாராயம்!
கதர்க் குல்லாய்!!
காங்கிரசில் இடம் !!!

சேஷாஸலம்; ஜலகண்டபுரம்.

(?) "ஆகாஷ்வாணி"-அழைப்பதற்கு நன்றாகத்தானே இருக்கிறது.......?

கழுதைக் குட்டி — பார்ப்பதற்கு அழகாகத்தான் இருக்கிறது; ஆகவே தானும் அப்படி ஆகிவிட வேண்டுமென்று எந்த மானமுள்ள மனித நெஞ்சமாவது விரும்புமா?

சி. சு. தேவராசன்; லால்குடி.

(?) ரோஜாப் பூவுக்கும் நேருபிரானுக்கும் என்ன உறவு?

எப்போதும் அவர் மார்பில் இடம் பெறுகிற ரோஜாப் பூவிடம் கைகளைப் புண்ணாக்கும் முள் இருக்கிறது; நேருவிடமோ மற்றவரின் இருதயத்தைப் புண்ணாக்கும் சுடுசொல் இருக்கிறது!

(?) "சென்னை நகரசபைத் தேர்தலின்போது நாங்கள் நகரில் இல்லை; அதனால்தான் காங்கிரஸ் தோல்வி அடைந்தது"—என்று ஓர் அமைச்சர் பேசியிருக்கிறாரே?........

அவர் மட்டுமல்ல; கள்ள ஓட்டு போடுகிறவர்களும், ஆள் மாறாட்டம் செய்கிறவர்களும் கூட இப்படித்தான் சொல்கிறார்களாம்!

(?) சத்தியமூர்த்தி, காமராசர், கக்கன்—இது ஓர் அரசியல் பரம்பரை என்கிறார்களே....?

அதென்னவோ நமக்குப் புரியவில்லை; ஆனால் 'தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைமைப் பரம்பரை' என்பது மட்டும் உண்மை!

சி. தமிழரசன்; நெல்லை சந்திப்பு.

(?) நமது நாட்டில் தற்போதைய பெரும் பணக்காரன் யார்?

2,76,000 ரூபாயும், 453 ரூபாய் எடை தங்கமும், 10,380 ரூபாய் எடை வெள்ளியும் சென்ற மார்ச் மாதத்தில் — அதாவது ஒரு மாதத்தில் — வருமானமாகப் பெற்ற நபர் ஒருவர் இந்த நாட்டில் இருக்கிறார்— அந்த 'திருப்பதி வெங்கடாஜலபதி'யைத்தான் தற்போதைய பெரும் பணக்காரன் என்று அழைக்க வேண்டும்!

கே. அருணகிரி; திருவையாறு.

(?) ஒரிசா மாநிலத்தில் காங்கிரஸ்—பழைய மன்னர்களின் கட்சியான கண தந்திர பரிஷத்துடன் கூட்டுச் சேரலாமா?

ஏழை இயக்கத்தின் இந்த 'ஏறுமாறான' செயல் குறித்து காங்கிரசாரே ஆச்சரியப்படத்தான் செய்கிறார்கள். ஆனாலும்என்ன; அந்த மாநிலத்தைப்பொறுத்த வரையில் காங்கிரஸ் ஆழக் குழி தோண்டிப் புதைக்கப்பட்டு விடுவதைவிட, சீமான்களின் சட்டைப் பைக்குள் அடைக்கலமாவதுமேல் என்று கருதுகிறார்களே!

சீரற்ற கிழவிக்கு...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

கள்—என்பதை அவர்கள் அறியவில்லை.

தமிழ் மொழியும் அதன் கிளை மொழிகளாம் திராவிட மொழிகளும் வடமொழியிலிருந்து, அது பெற்றெடுத்த இந்தி போன்ற மொழிகளிலிருந்து முழுக்க முழுக்க வேறுபட்டவை; முரண்பட்டவை — என்பதை கால்டுவெல், கிரியர்சன், ஹீராஸ், பரிமாதிமாற் கலைஞர் போன்ற மொழியியல் மேதைகள் எடுத்துக் கூறியதை உணர்ந்தவர்கள் தென்னவர்! அவர்கள் உலக வழக்கொழிந்த ஆரியத்தின் காற்றுக்கூட தங்கள்மேல் படுவதை விரும்பமாட்டார்கள்.

இந்திய மொழிகளின் தாய் வடமொழி தான் என்றும், இந்திய ஒற்றுமை, அந்த செத்த மொழியின் சொத்தைச் சங்கிலிகளின் பிணைப்பால் நீடித்து நெடுங்காலம் நிற்கும் என்றும், மனப்பால் குடித்துக் கண்மூடிச் செல்லும் வடவரே! தப்புக் கணக்குப் போடுவோரே!

யானையை அழுகிய நாரால் கட்டியிழுத்துவர நினைக்காதீர்! பிளந்துவிட்ட வைரத்தைப் பிசின் போட்டு ஒட்ட வைக்க நினைக்காதீர்!

— அடியார்

" முத்தாரம் "

★ இரண்டாயிரத்து அறுநூறு ஆண்டு காலம் அழியாது — அவியாது இருந்த மன்னரின் 'தெய்வகுல அம்சங்களை'த் தூளாக்கினர், மன்னன் மகனும், அவன் மனம் கவர்ந்த காதலியும்! அந்தக் கதையை விளக்கும் கட்டுரை......

சூரியகாந்தி

★ யாரிடமும் கடன் படலாம் ஆனால், பொல்லாத தூக்கத்திற்கு மட்டும் கடன்பட்டு விடாதீர்கள்! வாழ்க்கை விபத்தை ஏற்படுத்தி மன அமைதியைக் கொன்றுவிடும் அது—ஆகவே......

தூக்கத்தை ஏமாற்றுதீர்!

● தந்தை மதத்தைக் காட்டி மிரட்டினார்; தாய் கண்ணீர் விட்டுக் கதறினாள்; எனினும் பாச பந்தங்களை அறுத்தெறிந்து போர்க்களத்தில் பாய்ந்தான்,—இன்று வரலாறு போற்றும் வல்லரசுத் தலைவனானன்; அவன்தான்.......

போர்க்களப் புயல்

இவை மட்டுமேல்ல;

கலையழகுடன் நாட்டின் நிலைவிளக்கும் கட்டுரைகள்; கதைகள்; கவிதைகள் நிரம்பிய

இலக்கிய ஏடு !

விற்பனையாகிறது! இதழ் - 26!

ரோமாபுரி ..

[7—ம் பக்கத் தொடர்ச்சி]

கம், தரையிலே கிடந்தது! உலகத்துப் பெரும் ஓவியம் மண்ணிலே சிதைந்து கிடந்தது!

அகஸ்டசும் ஜூனேவும் அந்தக் காட்சியைக்கண்டார்கள். ஜூனே தன் தலைவியின் பிணத்தின்மீது விழுந்து விழுந்து புரண்டு அழுதாள். சார்மியானை சபித்தாள். அவள் எதிரியின் கையாள் என்று குற்றம் சாட்டினாள். சார்மியான் அதைவிட்டு ஓடினாள். ஜூனே, அகஸ்டசிடம் வேண்டிக் கொண்டாள்; காதலர்களை மரியாதையோடு கல்லறையில் வைக்கவேண்டுமென்று!

அப்படியே சகலமரியாதைகளுடனும் புகழ்பெற்ற காதல் முத்துக்களை மண்ணுக்குள் புதைத்தனர்.

சிறுமி ஜூனேவின்மீது அகஸ்டசுக்குத் தனி அன்பு பிறந்தது "நீ என் தங்கை ஆக்டேவியாவைப் போலவே இருக்கிறாய். நீயும் என்னுடன் ரோமுக்கு வந்துவிடேன்!" என்று அழைப்பு விடுத்தான் அகஸ்டஸ். முதலில் ஜூனே தயங்கினாள். அகஸ்டசின் நற்குணச் செயல்கள் அவளுக்கு அவன்மீது மரியாதையை வளர்த்தது. சரியென்று ஒப்புக் கொண்டாள். அகஸ்டஸ், ஜூனேவை அழைத்துக் கொண்டு ரோம் நோக்கிப் புறப்பட்டான்.

★

ரோமாபுரியில் கி. மு. 9-ம் ஆண்டு வரையில் இருந்த நிலைமை இது!

இப்போது நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய பெயர்களும் நிகழ்ச்சிகளும் வருமாறு:

* அகஸ்டஸ் சீசர்
* கரிகாலன்
* பெருவழுதிப் பாண்டியன்
* அகஸ்டஸ் சீசரின் மனைவி லிவியா
* கிளியோபாட்ராவின் இளந் தோழி ஜூனே
* அந்தணியின் மனைவி ஆக்டேவியா
* ரோம் அகஸ்டஸ் ஆட்சிக்கு வந்து விட்டது!
* அந்தணி மாண்டு விட்டான், ஆக்டேவியாவைத் தவிக்க விட்டு விட்டு!
* அகஸ்டசை லிவியா என்பவள் மணந்து கொண்டிருக்கிறாள். அவள் விழி களிட்ட ஆணையை அகஸ்டஸ் மன்னன் தட்டுவதில்லை.
* எகிப்தில் வெற்றிக் கொடி நாட்டிய அகஸ்டஸ், ராணி கிளியோ பாட்ராவின் தோழி ஜூனேவுடன் ரோமுக்குத் திரும்புகிறான்.
* இப்பொதெல்லாம் தமிழகத்தில் சோழன் கரிகாலனும், பாண்டியன் பெருவழுதியும் ஆண்டு கொண்டிருக்கிறார்கள்.

✲

அடுத்த இதழில் தமிழகத்திலேயிருந்து கப்பல் புறப்படுகிறது. கதையும் தொடங்குகிறது.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, முரசொலி அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, சென்னை-6, தமிழ்நாடு.